பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 23 திங்கட்கிழமை (08.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:012

# கூட்டமைப்பு எம்.பி. அரியநேத்திரனை வெளிநாடு செல்ல விடாது தடுத்தது சி.ஐ.டி!



## விமான நிலையத்திலிருந்து அவர் திருப்பப்பட்டார்

கொழும்பு, டிசெம்பர் 08

இந்தியா செல்வதற்காக நேற்றுக்காலை கட்டுநாயக்கா விமான நிலையத்திற்குச் சென்ற மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத் திரன் வெளிநாடு செல்ல அனுமதிக்கப்படமாட்டார் என்று தெரிவித்துத் தடுக்கப்பட்டார். அவரை அங்கு வழிமறித்த குற்றப்புலனாய்வுப் பொலிஸார் (சி.ஐ.டி), அவர் வெளிநாடு செல்லாமல் தடுக்கும் உத்தரவு அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து, விமானநிலையத்திலிருந்து அவரைத் திருப்பி அனுப்பிவைத்தனர்.

இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டுப் பிரதேசத்திற்குள் பிறிதொரு அரசை ஸ்தாபிக்கும் முயற்சிக்கு ஒத்துழைத்து, உதவி வழங்கி, பிரசாரம் செய்தனர் எனத் தெரிவித்து அரியநேத்திரன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு எம்.பிக்களுக்கு எதிராக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் (சி.ஐ.டியினர்) கொழும்பு நீதிவான் நீதிமன்றில் கடந்த வெள்ளியன்று முதனிலை அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர் என்பது தெரிந்ததே.

இந்த நால்வரில் சிவாஜிலிங்கம் எம்.பி. ஏற்கனவே வெளிநாட்டில் இருப்பதால், மற்றைய மூவரான எஸ்.கஜேந்திரன், எஸ். ஜெயானந்தமூர்த்தி, பி.அரியநேத்திரன்

(13 ஆம் பக்கம் பார்க்க)

## வைத்திய சிகிச்சைக்கு இந்தியா போக விமானநிலையம் சென்றபோதே திருப்பி அனுப்பினர்

### அரியநேத்திரன் பி.பி.ஸிக்குப் பேட்டி

கொழும்பு, டிச. 08

''ஏற்கனவே திட்டமிட்டபடி வைத்திய சிகிச்சைக்காக இந்தியாவிற்குச் செல்வதற்காக விமான நிலையம் சென்றபோதே என்னைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் திருப்பியனுப்பினர்.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் (14 ஆம் பக்கம் பார்க்க)

(08.12.2008இல்) இன்று ஆரம்பமாகும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவச் செல்வங்கள் அனைவரும் சிறப்புடன் சித்தி அடைய உதயனின் கல்விச்சுடர் தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. மனஉறுதியுடன் பரீட்சையை எழுதுங்கள். வெற்றி நிச்சயம்.




## தமிழக மக்களும் தலைவர்களும் அரசியல் கோமாளிகள் இந்திய அரசு போர் நிறுத்தம் செய்யுமாறு ஒருபோதும் கேட்காது

### இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சொல்கின்றார்



கொழும்பு, டிசெ.8

தமிழ்நாட்டு மக்களும் அவர்களின் கட்சித் தலைவர்களும் அரசியல் கோமாளிகள் (Political Jockers). இந்த அரசியல் கோமாளிகளுக்கு இந்திய அரசு செவி சாய்க்காது என நான் திடமாக நம்புகிறேன்.

இவ்வாறு தெரிவித்திருப்பவர் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா ஆவார்.

'சண்டே ஒப்ஸேவர்' (07.12.2008) பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே பொன்சேகா இப்படி விமர்சித்திருக்கிறார்.

''புலிகளின் தனியரசுக் கொள்கை இந் தியாவுக்கு அச்சுறுத்தலானது'' என்றும் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

புலிகளுடன் மீளவும் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துமாறு இந்திய அரசு ஒரு போதும் இலங்கை அரசைக் கேட்டுக் கொள்ளாது. இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியை கொலை செய்த புலிகள் இயக்கத்தில் தங்கி பிழைப்பு நடத்தும் தமிழ் நாட்டின் அரசியல் கோமாளிகளுக்கு இந்திய அரசு செவிசாய்க்காது (14 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைநகர் கிளிநொச்சியை முத்தமிடும் தூரத்தில் இராணுவத்தினர்

### பாதுகாப்பு அமைச்சு சொல்கிறது

கொழும்பு, டிசெ. 08

வன்னிப் போர்க்களத்தில் புலிகளுக்குக் கடும் சேதத்தை ஏற்படுத்தியுள்ள படையினர், அவர்களின் கோட்டையாக விளங்கும் கிளிநொச்சிக்கு முத்தமிடும் தூரத்தில் (Kissing Distance) நிற்கிறார்கள் என்று பாதுகாப்பு அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

நேற்றைய தினம் படையினருடன் இடம் பெற்ற (14 ஆம் பக்கம் பார்க்க)

## வரவு-செலவுத் திட்டம் மீது இறுதி வாக்கெடுப்பு இன்று

கொழும்பு, டிசெ. 08

ஒரு மாதமாக நாடாளுமன்றில் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் 2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட விவாதம் இன்றுடன் முடிவுக்கு வருகின்றது. வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு இன்று பிற்பகல் நடைபெறும்.

கடந்த மாதம் ஆறாம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் வரவு - செலவுத் திட்டம் (13 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் சீரற்ற காலநிலை இரண்டு நாள்கள் தொடருமாம்

யாழ்ப்பாணம், டிசெ.8

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக குடாநாட்டில் மீண்டும் சீரற்ற காலநிலை நிலவுகிறது. நேற்று இடை இடையே மழை பெய்ததுடன் காற்றும் வீசியது. எனினும் நண்பகலுக்குப் பின்னர் வானிலை ஓரளவு சீரடைந்தது.

இதேவேளை-

யாழ்.குடாநாட்டை புயல் தாக்கலாம் என்ற அறிவிப்பு காரணமாக கடற்கரையோரப் பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்துள்ளார்கள்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய பட்ஜெட் வாக்கெடுப்பில் அரசைக் கவிழ்க்க ஐ.தே.க. அழைப்பு

கொழும்பு, டிசெ. 08

நாடாளுமன்றில் இன்று நடைபெறவுள்ள வரவு-செலவுத் திட்ட இறுதி வாக்கெடுப்பில் கலந்துகொண்டு வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்து அரசைக் கவிழ்க்க முன்வருமாறு ஐக்கிய தேசிய கட்சி, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

அரசுடன் இணைந்துள்ள ஐ.தே. கட்சி உறுப்பினர்கள் 17 பேரில் அதிகமானவர்கள் இன்றைய தினம் அரசிலிருந்து விலகி தம் பக்கம் வருவர் என்றும் அக்கட்சி நம்பிக்கை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அசுத்தமான கைகள் ஆரோக்கியத்தின் முதல் எதிரி!

அசுத்தமான கைகளில் ஆயிரக்கணக்கான கிருமிகள் இருக்கும். அவற்றினால் பல தொற்றுநோய்கள் ஏற்படலாம்.

எப்போதெல்லாம் கட்டாயமாகக் கைகளைக் கழுவ வேண்டும்?

- சாப்பிட முன்னர்
- சமைக்க முன்னர்
- மலகூடம் சென்று வந்த பின்னர்
- பிள்ளைகளுக்கு உணவூட்ட முன்னர்

– ஓடும் நீரில் கைகளை நன்கு சவர்க்காரமிட்டுக் கழுவுங்கள்.

– நகங்களினடியில் படியும் அழுக்கில் ஆயிரம் கிருமிகள் காணப்படும்.

– எனவே நகங்களைக் கிரமமாக வெட்டி சுத்தமாக வைத்திருங்கள்.

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

care

அனுசரணை: Care International

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**IIS** உங்களை மனமார வாழ்த்துகின்றது

**O/L 2008** பரீட்சைக்குத்

தோற்றும் அனைத்து ,மாணவர்களையும்

**IIS** மனமார வாழ்த்துகின்றது!.

INSTITUTE OF INFORMATICS STUDIES #100, Clock Tower Road, Jaffna

IIS CITY CAMPUS #200, Sivan Pannai Road, Jaffna.

## கண்ணீர் அஞ்சலி



04.12.2008 ஆம் திகதி அமரத்துவம் அடைந்த எமது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்

### கனகசபை கதிர்காமத்தம்பி
(விற்பனையாளர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!! சாந்தி!! சாந்தி!!

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்
கொடிகாமம். 060-221 6458.

கொடிகாமம். (சி/555907)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 03 ★ 10 ★ 1945



உதிர்வு 29 ★ 10 ★ 2008

அமரர் **அருணாசலம் ஸ்ரீகாந்தன்**
(ஓய்வுபெற்ற அதிபர்)

29.10.2008 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தெய்வம் அமரர் திரு.அருணாசலம் ஸ்ரீகாந்தன் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (08.12.2008) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இல. 68, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர். (80542)

## அடையாள அணிவகுப்பு ஒத்திப் போடப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.08

சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்களாகச் சந்தேகத்தின் பேரில் கைதான 4 பேர் குறித்த அடையாள அணி வகுப்பு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதும் சாட்சிகள் வராததால் வழக்கு பிற்போடப்பட்டுள்ளது.

மேலும் ஒரு திகதி பின்னர் அறிவிக்கப்படும் என நீதிவான் அறிவித்தார். (1-202)

## மென்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டம் நாளை

யாழ்ப்பாணம், டிசெ.08

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் முன்னாள் செயலாளர் ந.ஜெயத்திலகனின் ஞாபகார்த்தமாக நடைபெற்று வரும் மென்பந்துத் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு வைபவமும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சங்கத்தின் விளையாட்டு மைதா னத்தில் நடைபெறவுள்ளன.

சங்கத்தின் போசகர் குழந்தை சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் மோ.சாந்தசீலன் கலந்து கொள்வார். (1-202)

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர்கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களை இதில் கலந்து கொள்ளுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட் டுள்ளது. (1)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

மூன்று மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில மற்றும் O/L,A/L, B.A இலக்கணம், வினாவிடை வகுப்புகள் By:- N.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426, K.K.S வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை. (80538)

## தவறிவிட்டது

யாழ். - நெல்லியடிக்கு இடையில் தே.அ. அட்டை இல. 603322428V தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரியுடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

க.வரதவேல்

கிருச்சியால் மனோகரா, அல்வாய். T.P. 0779474839

## பதினைந்தாம் ஆண்டின் நினைவலைகள்

தோற்றம் 24 ★ 08 ★ 1929



மறைவு 25 ★ 11 ★ 1993

### அமரர் சின்னத்தம்பி சந்திரசேகரம்
(ஓய்வுபெற்ற P.W.D ஓவசியர், R.M.C., R.D.A)

திதி: ஏகாதசி 08.12.2008

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்துள் கலந்துவிட்ட எந்தையே!
சிந்தையுள் உமை நிறுத்தி சீருடன் வாழ்கின்றோம்
பாரினுள் உம் நாமத்தால் பண்புடனே
வாழ்ந்திடுவோம்.

"அன்பகம்",
இணுவில் மேற்கு, இணுவில்.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர். (80540)

## மரண அறிவித்தல்கள்

### இராசதுரை குணமணி

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை குணமணி நேற்று (07.12.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - ரூபவதி தம்பதியரின் அன்பு மருமகளும் இராசதுரையின் அன்பு மனைவியும் ராஜினியின் அன்புத் தாயும் வசந்தகுமாரின் அன்பு மாமியும் சிவப்பிரகாசம், காலஞ்சென்ற றோசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நேரிய தூது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (80545)

தகவல்:
சு.இராசதுரை (கணவர்).

### செல்லையா சபாலிங்கம்
(இலங்கை வங்கி - முல்லைத்தீவு)



அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிரி ஆனந்த வாசத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அல்வாயூர்க் கவிஞர் செல்லையா நாகமுத்து தம்பதியரின் புத்திரன் சபாலிங்கம் (இலங்கை வங்கி - முல்லைத்தீவு) 05.12.2008 வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் ஆனந்தாதேவியின் அன்புக் கணவரும் துஷ்யந்தன் (இலங்கை வங்கி - பருத்தித் துறை), பிரசாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கவிக்குயில் மு.செ.விவேகானந்தன், திருமதி பாரதி இரத்தினராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (07.12.2008) ஞாயிறு மு.ப. 10 மணிக்கு புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் இடம் பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"ஆனந்தவாசம்"
வதிரி. (சி/556008)

தகவல்:
ச.துஷ்யந்தன் (மகன்).

### செல்லையர் சிவபாலன்



பண்ணாலை, தெல்லிப்பழையைச் சேர்ந்த முன்னாள் தபால் தந்திப் பரிசோதகரும் அபுதாபியில் தபால் தந்தி அத்தியட்சகராகப் பணியாற்றியவருமாகிய செல்லையா சிவபாலன் 05.12.2008 வெள்ளிக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னம்மா தம்பதியினரின் மூத்த புதல்வரும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் பகீரதன் (Singapore), சிவரதி (Australia) ஆகியோரின் அன்புத் தந்தையும் கேதீஸ்வரன் (Australia), பூங்கோதை (Singapore) ஆகியோரின் அன்பு மாமனாரும் வர்ஷினி (Australia), கேஷனி (Australia) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சின்னத்தம்பு (தபால் அதிபர்) - காமாட்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் மகேஸ்வரி (ஓய்வுபெற்ற மருந்தாளர்), சண்முகசுந்தரம், லகுதாதேவி, தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் குமாரதேவி, மகேஸ்வரன், காலஞ்சென்ற சோமசுந்தரம் (MLT உத்தியோகத்தர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.12.2008) திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு தகனஞ் செய்யப்படும். அன்றைய தினம் அவரின் பன்னாலை இல்லத்திலும் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

தகவல்:
ம.லகுதாதேவி
(சகோதரி).

## கலாநிதி அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவரது மூன்றாவது குருபூசைத் தினம்



அருட்கவி எங்கள் உயிர்க்கவி நாளும்
ஒத்துவோம் உங்கள் பாதக்கனி
நமக்கினி இந்தவுலகினில் – வேறு
தெய்வ முண்டோ அருள்ஒளி

தாயுமாய் தந்தை குருவுமாய் – மேலாம்
தெய்வமாய் நடமாடினீர்
வானுளோர் போற்றும் தெய்வமாய்
காசிலிங்க மாகிய சோதியே

திருநீறும் ருத்ர மாலையும் காவி
உடையுமாய் தரிசனம் தந்த
சோதிட வைத்ய கவிஞனாம்
விநாசித்தம்பி என்னும் எம் மகாத்மாவே

ருத்ரோட்காரி ஐப்பசி மகம்
மனோன்மணி நாறாயணரூபமாய் – உதித்து
பார்த்திப கார்த்தி ரேவதி காசி
லிங்கமாகிய அருள் ஒளி.

கலாநிதி அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவரது மூன்றாவது குருபூசைத்தினம் இன்று (08.12.2008) திங்கட்கிழமை மு.ப.9.00 மணிக்கு அன்னசுரபி மண்டபத்தில் சமாதி பூசையுடன் ஆரம்பமாகும். மதியம் 12 மணியளவில் அன்னதான வைபவம் இடம்பெறும். இந்நிகழ்வில் அன்பர்கள், அடியவர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நாகேஸ்வரம்,
அளவெட்டி. (80533)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழர் போராட்டத்தை அடக்க கச்சை கட்டி நிற்கும் சிங்களம்

பிரிவினைக்கு ஆதரவாகச் செயற்படமாட்டோம் என நாடாளுமன்றத்தில் செய்துகொண்ட தமது சத்தியப்பிரமாணத்துக்கும், அரசமைப்புக்கும் எதிராகச் செயற்பட்டார்கள் என்று தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுத்துறையினர் தாக்கல் செய்த முதனிலை அறிக்கையை (B Report) ஒட்டித் தாம் கடந்த வெள்ளியன்று காலை விடுத்த உத்தரவை அன்று மாலையே வாபஸ் பெற்றுக்கொண்டு விட்டார் கொழும்பு பிரதம நீதிவான்.

மட்டக்களப்பு எம்.பிக்களான சேனாதிராஜா ஜெயானந்தமூர்த்தி, பாக்கியசெல்வம் அரியநேத்திரன், யாழ். மாவட்ட எம்.பிக்களான செல்வராஜா கஜேந்திரன், கனகலிங்கம் சிவாஜிலிங்கம் ஆகிய நால்வரையும் இவ்விடயத்தை ஒட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்புவதற்கு முதலில் கட்டளையிட்ட நீதிவான் நிஷாந்த ஹப்பு ஆராய்ச்சி, மாலையில் அந்த உத்தரவை வாபஸ் பெற்றதுடன், இவ்விடயம் குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று மேல் நடவடிக்கைகளை எடுக்குமாறு குற்றப் புலனாய்வுத்துறைப் பொலிஸாரைப் பணித்தார் என்றும் தகவல் வெளியாகியிருக்கின்றது.

இந்த உத்தரவு திடீர் வாபஸானமைக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

இனப்பிரச்சினை விவகாரம் சர்வதேச ரீதியில் சூடுபிடித்திருக்கும் இச்சமயத்தில், தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கு எதிராகச் சட்டத்தின் பெயரால் கத்தியை நீட்டுவது விரும்பத் தகாத நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்று அரசுத் தலைமை கருதியதால், குற்றப் புலனாய்வுத் துறையால் முன்னெடுக்கப்பட்ட இந்நடவடிக்கை குறித்து அறிந்ததும், அதில் தலையிட்டு அதை இடைநிறுத்தி வைக்க அரசுத் தலைமை வழிப்படுத்தியிருக்கலாம் என்று ஒரு சாரார் கருதுகின்றனர். ஆனால், அது தவறு.

ஈழத் தமிழரின் அரசியல் விவகாரத்தில் பலத்த சர்ச்சைகளையும், நெருக்கடிகளையும், பின்விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடிய இந்த விவகாரத்தை, அரசுத் தலைமையின் முன் அனுமதியும், பச்சைக்கொடி சமிக்ஞையும் பெறாமல் குற்றப் புலனாய்வுத்துறை இந்நடவடிக்கையை ஆரம்பித்து, அதை நீதிமன்றுக்குக் கொண்டுசெல்லும் அளவுக்கு நகர்த்தியிருக்காது என்பது வெளிப்படை.

அப்படியானால், இவ்விடயத்தில் நீதிவான் தமது முடிவை மாலைக்கு இடையில் மாற்றும் சூழல் ஏன் வந்தது என்று ஒரு கேள்வி எழுகிறது.

நீதி நிர்வாகத்துறையினர் உயர் மட்ட ஆலோசனையின் பேரிலேயே இந்நடவடிக்கை - முடிவை மாற்றும் நீதிவானின் செயற்பாடு - அமைந்ததாக சில வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

பிரிவினைக்கு ஆதரவான செயற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் நியாயாதிக்கம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினுடையது என்கின்றன சட்ட வட்டாரங்கள். ஆகவே, அந் நீதிமன்றத்தின் உத்தரவு பெறவேண்டிய நிலையில், தவறுதலாக இந்த விடயத்தை நீதிவான் நீதிமன்றுக்குக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் கொண்டு போய்விட்டனர் என்றும், இந்தத் தவறினால் - அடிப்படைப் பிழையினால் - வழக்கு அடிபட்டுப் போவதைத் தவிர்ப்பதற்காகவே விரைந்து மாலைக்கு இடையில் நிலைமை சீர்செய்யப்பட்டது என்றும் சட்ட வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது.

இதன் காரணமாகவே, இவ்விடயத்தில் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரைத் தம்பாட்டில் செயற்படாமல், சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்று அவரின் வழிகாட்டுதலில் செயற்படும்படி தமது பிந்திய உத்தரவில் நீதிவான் கட்டளையிட்டார் என்றும் கூறப்பட்டது. ஆகவே, தமிழர்களின் பெருவாரி நாடாளுமன்றப் பிரதிநிதிகளைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம். பிக்களுக்கு எதிராகச் சட்டத்தின் பெயரால் கத்தியை வலுவாகத் தீட்டித் தயாராகி வருகிறது கொழும்பு என்பது திண்ணம்.

1983 இல் ஜூலைக் கலவரத்தை அடுத்து, இலங்கை இனப்பிரச்சினை சூடு பிடித்தபோது, இப்படித்தான் அரசமைப்புக்கு ஆறாவது திருத்தத்தை - பிரிவினைக்கு எதிரான ஏற்பாடு என்ற பெயரில் - ஒரு தலைப்பட்சமாகக் கொண்டுவந்த சிங்கள ஆட்சிப்பீடம், அதன் மூலம் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநித்துவத்தை அப்போது இல்லாமல் செய்து வறிதாக்கியது.

தமிழர்களின் நாடாளுமன்றப் போராட்டத்துக்குக் கதவடைப்புச் செய்ததன் மூலம் விடுதலைக்கான அவர்களின் ஆயுதப் போராட்டம் வீறு கொள்ள அப்போது வழி செய்தது சிங்களம்.

இப்போதும் அதே தவறை இழைத்து மீளவும் ஒரு மோசமான விபரீதத்துக்கு அது அழைப்பு விடுக்கின்றது போலும்.

அதே அரசமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தைத் தமிழ் எம்.பிக்கள் மீது திரும்பவும் இப்போது ஏவிவிட்டு அவர்களின் நாடாளுமன்ற பிரசன்னத்தை இல்லாமலாக்க 'மஹிந்த சிந்தனை' அரசு தயாராகி வருவதையே குற்றப் புலனாய்வுப் பொலிஸாரின் இந்த நடவடிக்கை வெளிப்படுத்தி நிற்கின்றது.

கடந்த வருடம் வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் நெருக்கடியை அரசு எதிர்கொண்டபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்களின் நெருங்கிய உறவினர்கள், சகாக்கள் கடத்தப்பட்டு, அந்த அச்சுறுத்தலின்பேரில் வாக்கெடுப்பு சமயம் அந்த எம்.பிக்கள் சபைக்கு வராமல் பார்த்துக்கொள்ளப்பட்டது.

இப்போதும் அதே வாக்கெடுப்பு நெருங்கும் சமயத்தில் நீதிமன்றில் மோசமான சட்ட விவகாரத்தை எழுப்பி, சம்பந்தப்பட்ட எம்.பிக்கள் நாடு திரும்பினால் சிக்கல் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டு, அவர்களது நாடாளுமன்றப் பிரசன்னத்தைத் தடுக்க எத்தனிக்கப்படுகின்றது போலும்.

வரலாற்று உரிமையையும், நீதி, நியாயத்தையும், கௌரவ வாழ்வையும் கோரி தமிழினம் நடத்தும் போராட்டத்தைப் பூண்டோடு அழித்து, அந்த இனத்தை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தி ஆள்வதில் வெறியாக நிற்கும் சிங்களம், அதற்காக எல்லா மார்க்கங்களையும் ஒரே சமயத்தில் நாடுவதில் தீவிரமாக - பெரு முனைப்பாக - நிற்கிறது.

பெரும் போரைத் தொடுத்து இராணுவ ரீதியிலும் -

ஒட்டுக்குழுக்கள், துணைப்படைகள், துரோகக் கும்பல்கள் போன்றவற்றைக் களத்தில் இறக்கி அரசியல் ரீதியிலும் -

இப்போது நீதிமன்றங்களை நாடி சட்ட வழியிலும் -

தமிழர் போராட்டத்தை அடக்கி, ஒடுக்க சிங்களம் கச்சைக் கட்டி நிற்கின்றது.

# வன்னியில் கைப்பற்றிய இடங்களில் பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படும்

வன்னியில் விஸ்தாரமான பிரதேசத்தைப் படையினர் கைப்பற்றியிருப்பதன் காரணமாக அவைகளை தக்கவைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன்பொருட்டே அப்பகுதிகளில் பொலிஸ் நிலையங்களை நிறுவும் நோக்கம் எழுந்துள்ளது. பொலிஸ் நிலையங்கள் நிறுவப்படுமானால் அப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் முன்னரங்கப் பகுதிகளுக்கு நகர்த்தப்படுவார்கள். இதைக் கருத்திற்கொண்டு பொலிஸ் திணைக்களமும் பெரும்எடுப்பில் ஆள்சேர்க்கும் பணியொன்றை முன்னெடுக்கவிருக்கின்றது. அதிக எண்ணிக்கையானவர்களை சேர்த்துக்கொள்ளும் நோக்கம் காரணமாக பொலிஸில் சேர்ப்பவர்களுக்கான குறைந்தபட்ச தகுதிகள் மேலும் குறைக்கப்பட விருக்கின்றன.

## இதற்கென கல்வியில் குறைந்த தகுதியுள்ளவர்களுக்கும் வாய்ப்பு



***'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை களநிலை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் 07.12.2008 அன்று அப்பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையின் சிலபகுதிகள் இங்கு தரப்படுகின்றன.***

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் களநிலை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தமது வாராந்த ஆய்வுக்கட்டுரையில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். அவர் தமது கட்டுரையில் வெளியிட்டுள்ள மேலும் சில தகவல்கள் வருமாறு:-

பூநகரி-கிளிநொச்சி வீதியில் முன்னேறும் படையணிகள் மீது நவம்பர் 23ஆம் திகதி கெரில்லாக்கள் நடத்திய கடும் எதிர்தாக்குதல்களைத் தவிர வன்னிப்போர் முனையில் பெரும்பாலும் அமைதியே நிலவிவந்துள்ளது. இந்தத் தாக்குதலை குஞ்சிப் பரந்தனில் புலிகள் நடத்தியிருந்தார்கள். இந்த மோதலில் இருதரப்புமே பலத்த சேதங்களை எதிர்கொண்டன. காணாமல் போனவர்கள் உள்பட சேதத்துக்குள்ளானவர்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் இப்பொழுது வெளியிடப்படமுடியாது. இதற்கு முக்கிய காரணமாக அமைந்திருப்பது பொது எதிரியான மழையாகும். வன்னியிலும், யாழ்.குடாநாட்டிலும் மழை பேரனர்த்தங்களை விளைவித்துள்ளது. களமுனைகள் பலவிடங்களிலும் நீர்சூழ்ந்து நிற்கின்றன. மனித நடமாட்டத்தைப் பெரிதும் பாதித்துள்ளது.

படையினரைப் பொறுத்தவரை அவர்களுக்கான உணவுகள், மருந்து மற்றும் இராணுவப் பொருள்களின் விநியோகம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. காயமடைந்தவர்களை அப்புறப்படுத்துவதும் பெரும் இக்கட்டுக்குள்ளாகியுள்ளது. உழவு இயந்திரங்களின் நகர்வையும்கூட இது பெரிதும் பாதித்துள்ளது.

### அடம்பன் கிராமத்தின் சில பகுதிகள்


அடம்பன் கிராமத்தின் சில பகுதிகளை படைகளின் செயலணி -1 தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளது. பாரதிபுரத்தின் வடக்காக நகர்ந்து கொக்காவிலை மீளக் கைப்பற்ற இந்த அணி முயன்றுகொண்டிருக்கிறது.

ரூபவாஹினி வலையமைப்பினை வன்னிப்பிரதேசத்துக்கு ஒளிபரப்புவதற்கான கோபுரம் இந்தப் பகுதியிலேயே அமைத்திருந்தது. இராணுவத்தின் 57ஆவது அணிப்பிரிவு இரணைமடுக்குளத்தின் வெளிப்புறத்தை அண்மித்துள்ளது. புலிகள் அமைத்திருந்த அகழி மற்றும் மண் அணைகளுக்கு அப்பால் நகர்ந்துள்ள இப்படையணி கடுமையான எதிர்த்தாக்குதல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றது. இந்த இடம் கிளிநொச்சியிலிருந்து சுமார் ஆறு கி.மீ தூரத்தில் இருப்பதாக வன்னியில் உள்ள படையினர் தெரிவிக்கின்றனர். செயல் அணி - 3இன் படையினர் மாங்குளத்திலிருந்து கிழக்காக முன்னேறி ஒலுமடுவை அடைந்துள்ளனர். செயல் அணி - 2 புளியங்குளத்தில் தமது தற்காப்பு அரணை இந்த வாரத்தில் அமைத்துள்ளது. இராணுவம் இங்கு கிழக்கு நோக்கியும் நகர்ந்துகொண்டிருக்கின்றது. கனகராயன்குளம் மற்றும் நெடுங்கேணி கிராமத்தை இனிமேல்தான் அவர்கள் சென்றடைய வேண்டும்.

வெலிஓயா முனையில் செயல்படும் 59ஆவது படையணியினர் கணிசமான அளவு பிரதேசத்தை மீளக் கைப்பற்றியுள்ளனர். மேற்குப் பகுதியில் ஒதியமலையும் கிழக்கில் அலம்பில் கரையோரக் கிராமமும் இதில் அடங்கும்.

அங்குமிங்குமாக ஒருசில எதிர்ப்புக்களைத் தவிர புலிகள் தமது படையணிகளை கிளிநொச்சியையும் முல்லைத் தீவையும் பாதுகாப்பதற்காக பின்நகர்த்தியிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

### நிலக்கண்ணிகள் அள்ளுண்டு போயுள்ளன



விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பின்னடைவு என்னவென்றால் படைகளின் முன்நகர்வைத் தடுப்பதற்கு அவர்களால் விதைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணிவெடிகள் பலவும் கடும் மழை வெள்ளத்தினால் அள்ளுண்டு போயிருப்பதாகும்.

குஞ்சுப்பரந்தன், கிளிநொச்சி, மற்றும் ஒட்டுசுட்டானில் பொதுமக்கள் நிலக்கண்ணிகளையும் மற்றும் அது போன்ற வெடி பொருள்களையும் விதைப்பதற்கு பயன்படுத்தப்படுகிறார்கள் என்று கூறப்படுகின்றது.

அண்மைக்கால மழை வெள்ளத்தினால் சுமார் 7 ஆயிரம் கால்நடைகளும் 5 ஆயிரம் கோழிகளும் அழிந்துவிட்டதாகப் புலிகள் அறிவித்துள்ளார்கள். இந்த வாரமும் மழை விட்டுவிட்டு பெய்துகொண்டிருந்தது. சில இடங்களில் மிருகங்கள் இறந்து கிடப்பதால் துர்நாற்றம் சகிக்கமுடியாமல் இருக்கிறது. மக்கள் குடியிருப்பதற்கு முடியாதநிலை தென்படுகின்றது.

ஜி.சீ.ஈ (சாதாரணதரம்) பரீட்சைக்கு தோற்றும் 10 ஆயிரம் மாணவர்களுக்கு பரீட்சை நிலையங்களை அமைத்துக் கொடுப்பது கல்வித் திணைக்களத்துக்குப் பெரும்பாடாகவிருப்பதாக புலிகள் விடுத்துள்ள அறிக்கை தெரிவிக்கிறது. இடம்பெயர்ந்த மக்கள் பிரச்சினை ஒருபுறம். இடப்பெயர்வின் காரணமாக மாணவர்கள் வெவ்வேறு இடங்களில் வதிவதும் கல்வி அதிகாரிகளுக்குப் பெரும் பிரச்சினையாகவிருக்கின்றது.

மலேரியா நோய் பரவத் தொடங்கியிருப்பது இன்னுமொரு பிரச்சினையாகும். இதுவரை 52 பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்னமும் நோய்த்தடுப்பு மருந்துகள் விசிறப்படவில்லை. மலேரியா எதிர்ப்பு மருந்துகள் வன்னிக்கு எடுத்து வரப்படுவதும் அனுமதிக்கப்படவில்லையென்று அந்த அறிக்கை கூறுகின்றது.

### இராணுவத்தின் முக்கிய குறிக்கோள்

கிளிநொச்சி நகரப் பகுதியைக் கைப்பற்றுவதே இராணுவத்தின் முக்கிய குறிகோளாக இருந்து வந்துள்ளது. இந்த நோக்கத்தை நிறை வேற்றிக் கொள்வதற்காக 57ஆவது படையணி அக்கராயனிலிருந்து முன்னேறி வருகின்றது. பரந்தன் - கிளிநொச்சி வீதியில் செயல் அணி -1 முன்னேறிக்கொண்டிருக்கிறது. இரணைமடு நீர்ப்பாசனக் குளத்துக்கருகாக அதே படையணியின் இன்னொரு பிரிவு முன்னேறி வருகின்றது. இந்தப் படையணிகள் இப்போது எதிர்கொண்டுவரும் கடும் எதிர்ப்புக்களை முறியடித்தால் மட்டுமே இவர்களின் நோக்கம் நிறை வேறமுடியும்.

வன்னிக் களமுனையைச் சேர்ந்த படை அதிகாரி ஒருவர் இதுபற்றி பின்வருமாறு தெரிவித்தார்: எம்மால் காலம் நேரம் எதுவும் சொல்ல முடியாது. விரைவாகவும் நடக்கலாம், காலதாமதமும் ஏற்படலாம். முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பிரதேசத்தைத் தக்கவைத்துக்கொள்ள தம்மிடமுள்ள எல்லா வளங்களையும் புலிகள் பயன் படுத்தி வருகிறார்கள்.

டிசெம்பர் 20ஆம் திகதி இராணுவம் புதிதாக செயல்அணி ஒன்றை ஆரம்பிக்கவிருக்கிறது. இந்தச் செயல் அணி-4 எந்த இடத்தில் நிலை நிறுத்தப்படும் என்று தெரியவில்லை. இதன் கட்டளைத் தளபதியாக டி.சி. எஸ்.வன்னியாராச்சி நியமிக்கப்பட்டுள்ளார். (ப)

# நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 24 | 09.12.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | காலை 07.29வரை |
| நட்சத்திரம்: | அச்சுவினி |
| | மு. இ. 09.32வரை |
| சுபநேரம்: | 10.49 - 12.19 |
| ராகுகாலம்: | 03.19 - 04.49 |

# கிளி., முல்லைத்தீவு மாவட்டங்களில் 52 பேர் மலேரியாவால் பாதிப்பு

கிளிநொச்சி, டிசெ.8

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இது வரை 52 பேர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார சேவையினர் தெரிவித்தனர்.

கடந்த பல வருடங்களாகக் கட்டுப்பாட்டில் இருந்த மலேரியா நோய் தற்பொழுது ஏற்பட்டுள்ள இடம்பெயர்வினால் வன்னிப் பகுதிகளில் பரவத் தொடங்கியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 07 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 45 பேரும் என 52 பேர் மலேரியா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இந்நிலையில் மலேரியா நோயாளிகள் இனங்காணப்பட்ட வடமராட்சி கிழக்கு, சுண்டிக்குளம், விசுவமடு, புதுக்குடியிருப்பு உள்ளிட்ட பகுதிகளில் மலேரியாத் தடுப்பு நடவடிக்கைகளையும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருவதாகச் சுகாதார சேவையினரின் தொற்று நோய் விழிப்புணர்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.(202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்பந்து ஜாம்பவான் மரடோனா இந்தியா வருகை!

கொல்கத்தா, டிசெ. 08

கால்பந்து உலகின் ஜாம்பவான் மரடோனா நேற்றுமுன்தினம் கொல்கத்தா வந்தார். இந்திய கால்பந்து பயிற்சி நிலையத்தைத் தொடக்கி வைத்த இவருக்கு ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். ஆர்ஜென்டினாவின் முன்னாள் கால் பந்து வீரரும், தற்போதைய பயிற்சியாளருமான டீகோ மரடோனா 2 நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார். நேற்றுமுன்தினம் அதிகாலை 1.30 மணிக்கு கொல்கத்தா விமானநிலையம் வந்து சேர்ந்த அவருக்கு மேற்குவங்க விளையாட்டு அமைச்சர் சுபாஷ் சக்ரபர்த்தி, இந்திய கால்பந் துக் கழகத்தின் நிர்வாகிகள் மற்றும் ஆயிரக்கணக் கான ரசிகர்கள் வரவேற்புக் கொடுத்தனர்.

மும்பைத் தாக்குதலை அடுத்து மரடோனா இந்தியா வருவாரா என்ற சந்தேகம் ஏற்பட்டது. இதனால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலி ஸார் பாதுகாப்பில் ஈடுபட்டனர். இரவு 9.30 மணி யில் இருந்து ரசிகர்கள் கூட்டம் அலைமோதியது. மரடோனா வந்தவுடன் பாதுகாப்புக்கு அமைக் கப்பட்டிருந்த தடுப்புகளைத் தாண்டி ரசிகர்கள் வெமுற்பட்டனர். மரடோனோவுடன் அவரு டைய தோழி வெரோனிகாவும் வந்திருந்தார். விமானநிலையத்தில் இருந்து பிரமாண்டமான பஸ்ஸில் ஹோட்டலுக்கு இருவரும் அழைத் துச் செல்லப்பட்டனர். வழிநெடுகிலும் மர டோனா உற்சாகத்தில் கையசைத்துக்கொண்டே வந்தார். அவரைப் பார்த்து 'டீகோ', ''டீகோ' என்று ரசிகர்கள் ஆரவாரமிட்டனர். ஹோட்ட லுக்கு அருகில் சென்றபோது திடீரென தெரு விளக்குகள் அணைக்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான ரசிகர்கள் தங்கள் கையி லிருந்த 'டோர்ச் லைட்டுகளை' ஒரே நேரத்தில் எரியவிட்டனர். அப்போது அங்கு வைக்கப்பட் டிருந்த பதாகைகளில் ''மரடோனா எங்களது கட வுள் இதுவரை அவரைப்பற்றி கேள்விப்பட்டி ருக்கிறோம். இப்போது அவரை நேரில் காண் கிறோம். அவர் எங்களை ஆசிர்வதிக்கிறார்,'' என்று காண்பிக்கப்பட்டது.



கொல்கத்தா வந்த மரடோனா பஸ்ஸில் இருந்தவாறு ரசிகர்களை நோக்கி உற்சாகமாகக் கையசைப்பதை முதல் படத்தில் காணலாம். பின்னர் அவர் 'பிளாஸ்டர் ஒவ் பாரிஸில்' தனது இடதுகால் தடத்தைப் பதிப்பதையும், கால்பந்து சாகசம் நிகழ்த்தி ரசிகர்களை வியக்கவைப்பதையும், தான் குருவாக மதிக்கும் புரட்சியாளர் சேகுவேராவின் படத்தைக் காண்பித்து மகிழ்வதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

பின்னர் கொல்கத்தாவில் இருந்து தனி யான ஹெலிகொப்டர் மூலமாக மஹேஷ்தலா சென்றார். அங்கு இந்தியக் கால்பந்து நிலையத் திற்கு அடிக்கல் நாட்டினார். அப்போது மர டோனா கூறுகையில், ''எனது சொந்த நாடான ஆர்ஜென்டினா இங்கிருந்து அதிக தொலைவில் இருக்கிறது. ஆனால் இங்கு இவ்வளவு அதிக அளவில் கால்பந்து ரசிகர்கள் இருப்பார்கள் என்று எனக்குத் தெரியாது,'' - என்றார்.

அங்கு இருந்து 'சால்ட் லேக்' மைதானம் சென் றார் மரடோனா. அங்கு முதல்வர் மற்றும் வெளி யுறவுத்துறை லெவன் அணிகளுக்கு இடையி லான கால்பந்து காட்சிப்போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மரடோனா பந்தைக் காலால் உதைத்துப் போட்டியைத் தொடக்கிவைத் தார். தனது கால்பந்து சாகசங்களையும் நிகழ்த்திக் காட்டிய இவர் வீரர்களை கட்டிப்பிடித்து வாழ்த்து தெரிவித்தார். போட்டியையும் உற்சாகமாக கண்டு களித்தார். இதைக் காண சுமார் ஒரு லட் சத்து, 20 ஆயிரம் ரசிகர்கள் அரங்கில் திரண் டிருந் தனர்.

முன்பு கொல்கத்தா வந்திருந்த ஜேர்மனி வீரர் ருமேனிகே, பீலேயை விட மரடோனாதான் சிறந்த வீரர் எனக் குறிப்பிட்டிருந்தார். இதுகுறித்து மரடோனா கூறியவை வருமாறு:-

ருமேனிகே தனது சொந்தக் கருத்தைத் தெரி வித்துள்ளார். எனது அம்மாவின் கருத்துப்படி நான் தான் உலகின் தலைசிறந்த கால்பந்து வீரர். 1986 இல் இங்கிலாந்து அணிக்கெதிராக நான் அடித்த கோல் 'கடவுளின் கையால்' அடிக்கப்பட்டது. அதுதான் என் வாழ்வின் சிறப்பான கோல். உல கில் கடவுள் ஒருவர்தான். எல்லோரும் என்னை கடவுளாக நினைக்கின்றனர். ஆனால் கடவுள் மற்றவர்களுக்கு உதவி செய்வார். நான் கால்பந் திற்கு உதவுகிறேன். இதனால் கால்பந்து உலகின் கடவுளாக என்னைக் கருதலாம். ஆர்ஜென் டினா அணியின் முன்னாள் கால்பந்துப் பயிற்சி யாளர் கார்லோஸ், முன்னாள் கியூபா அதிபர் பிடல் காஸ்ட்ரோ இருவரும் என்னுடைய வாழ்க் கையில் மிகவும் உதவியாக இருந்துள்ளனர்'' - இவ்வாறு மரடோனா கூறினார். (த)

## டோனிக்கு கொமாண்டோ பாதுகாப்பு



இந்திய அணியின் தலைவர் டோனிக்குப் பாதுகாப்பு அதிகரிக்கப்படவுள்ளது. தேவைப்பட்டால் கொமாண்டோப் பாதுகாப்பு அளிக்குமாறு ஜார்க் கண்ட் மாநில முதல்வர் சிபுசோரன் உத்தரவிட்டுள்ளார். சென்னையில் நடந்த இந் திய அணியின் தேர்வுக்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற் காக அணித்தலைவர் டோனி, கடந்த 4ஆம் திகதி ராஞ்சி விமான நிலையத்துக்கு வந்தார். அப்போது டோனிக்குப் பாதுகாப் பாக துப்பாக்கி ஏந்திய பொலிஸார் ஒருவர் கூட வரவில்லை. மும்பைத் தாக்குதல் நடந்த நிலையில் இவருக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்படாதமை பெரும் சர்ச்சையை ஏற்படுத் தியது.

நக்சலைட்டுகள் மிரட்டல் காரணமாகக் கடந்த ஆண்டு டோனிக்கு 'இசட்' பிரிவு பாதுகாப்பு அளிக்கப்படும் என அரசு அறிவித்திருந்தது. ஆனால் முழுமையான பாதுகாப்பு வழங் கப்படாமல் இருக்கிறது. அவரது முன்னாள் பயிற்சியாளர் பட்டாச்சரியா, ''டோனிக்கு வழங்கப்படுவதாக அறிவித்த 'இசட்' பிரிவுப் பாதுகாப்பு பெயரளவில் தான் இருக்கிறது,'' - என்றார்.

இந்த நிலையில் முதல்வர் சிபுசோரன், டி.ஜி.பியைத் தொடர்புகொண்டு டோனிக்குப் பாது காப்பை அதிகரிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இது குறித்து அவரது செய்தித்தொடர்பாளர் கூறுகையில்:-

''இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் டோனிக்கு பாதுகாப்பை மறுஆய்வு செய்து, தற்போதைய பொலிஸாரை மாற்றிவிட்டு, துப்பாக்கி ஏந்திய பொலிஸ் பாதுகாப்பு அளிக்கவும், தேவைப்பட் டால் கொமாண்டோப் பாதுகாப்பு அளிக்குமாறும் முதல்வர் உத்தரவிட்டுள்ளார்'' - என்றார்.(த)




## வீசாத ஓவரில் 31 ஓட்டங்கள்

கராச்சி, டிச. 08

கிரிக்கெட்டில் எத்தனையோ சாதனைகள் நிகழ்த்தப்பட்டு அவை முறியடிக்கப்பட்டும் வரு கின்றன. ஆனால் பாகிஸ்தானைச் சேர்ந்த வேகப் பந்து வீச்சாளர் ஒருவர் மிகவும் விநோதமான சாதனையை நிகழ்த்தி இருக்கிறார்.

அந்த பந்து வீச்சாளர் 10 நோ போல்களை வீசியிருக்கிறார். இப்படி ஒரு சரியான பந்தை கூட வீசாத அவர் 31 ஓட்டங்களை வாரி வழங் கினார்.

கராச்சி நகரில் நடைபெற்ற 20 ஓவர் கிரிகெட் போட்டியில் இந்த விநோத சாதனை நிகழ்ந்து உள்ளது. அப்போது 'போர்ட் காசின்' அணி யின் சார்பில் விளையாடிய ஜியாத் மிர் பந்து வீச அழைக்கப்பட்டார். அவர் வீசிய முதல் பந்தே நோ போலாக அமைந்தது.

அடுத்தடுத்து அவர் வீசிய பந்துகள் நோ போலாகவே அமைந்தன. இப்படி தொடர்ந்து பத்து பந்துகளை அவர் நோ போலாகவே வீசினார். இதனையடுத்து அவர் பந்து வீசுவதில் இருந்து விலக்கப்பட்டார்.

ஒரு பந்தைக்கூட சரியாக வீசாத நிலையிலும், அவர் பத்து நோ போல்களில் 31 ஓட்டங்களை வாரி வழங்கினார். (த)

## இந்து-கிறிஸ்தவர் திருமணம் இந்துச் சட்டப்படி செல்லாது என்று ஆந்திர நீதிமன்றம் தீர்ப்பு

புதுடில்லி, டிசெ.8

இரு இந்துக்களுக்கிடையே நடைபெறும் திருமணமே இந்துத் திருமணச் சட்டப்படி செல்லும் என்று ஆந்திர உச்சநீதிமன்றம் தீர்ப் பளித்தது.

ஆந்திராவைச் சேர்ந்த ஆர்.சி.கிறிஸ்த வரான செளரிராஜுலுக்கும், இந்து மதத் தைச் சேர்ந்த பண்டாரு பவானிக்கும் கோவிலில் ஒன்றில் 1996ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. தன்னை இந்து என்று கூறி ஏமாற்றி திருமணம் செய்து கொண் டார் எனவும், தனக்கு விவாகரத்து வழங் கும்படியும் பவானி நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த குடும்பநல நீதி மன்று 1955ஆம் ஆண்டு இந்துத் திருமண சட்டப்படி இந்தந் திருமணம் செல்லும் என்று கூறி விவாகரத்து வழங்க மறுத்து விட்டது. இதை எதிர்த்து பவானி ஆந்திரா உச்ச நீதிமன்றில் மனுச் செய்தார். வழக்கை விசாரித்த நீதிபதிகள் இந்துத் திருமணச் சட்டம் பிரிவு 5இன் கீழ் இந்தத் திருமணம் செல்லாது என்று கூறி பவா னிக்கு விவாகரத்து வழங்கியது.

செளரிராஜ் இதை எதிர்த்து உச்சநீதி மன்றில் மனுச் செய்தார். நீதிபதிகள் அல் டாமாஸ் கபீர், அப்தாப் ஆலம் ஆகியோர் அடங்கிய ஆயம் வழக்கை விசாரித்து உயர் நிதிமன்று வழங்கிய தீர்ப்பை உறுதி செய்து, ராஜின் மனுவைத் தள்ளுபடி செய்தது.

## மரண அறிவித்தல்

### பொன்னையா திருநாவுக்கரசு

(வெள்ளாம்போக்கட்டி கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர்)

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா திரு நாவுக்கரசு நேற்று (07.12.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா- சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தில்லையம்பலம்- செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும் விவேகினி, சிவனேசன்(லண்டன்), சிவசுதன் (சுவிஸ்), சிவதயாளன்(ஜேர்மனி), காலஞ்சென்ற சிவபாலன், சுபா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச்சிற்றம்பலம், ரஜினா, தவ மதி, சுஜாத்தா, அகிலன் ஆகியோரின் அன்பு மாமனும், கெளசிகா, கெளதமன், கானுஜன், விதுர்சனா, வியாசன், வினோஜன், விதுஷன், கானுஜா, கரிஷ், ஆகாஷ், அபிஷன் ஆகியோரின் அன்புப் பேர னும், சற்குணம்(கனடா), சிவகுரு, புஸ்பமலர், நவமலர் ஆகி யோரின் அன்புச் சகோதரரும், இராமச்சந்திரன், கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2008) திங்கட் கிழமை நண்பகல் 12மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வெள்ளாம்போக்கட்டி கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம்.

தகவல் :
தி.சரஸ்வதி.

## மரண அறிவித்தல்

### ஜோசப் ஞானப்பிரகாசம் அரியரட்ணம்

(FORMERLY STAFF JAFFNA COLLEGE & JOURNALIST ASSOCIATED PRESS AND REUTERS)



கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப் பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோ.அரியரட்ணம் அவர்கள் (05.12.2008) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப் பிரகாசம் - மேரி நேசமணி தம்பதியினரின் ஏகப் புதல்வனும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் ஞானம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சாந்தாதேவியின் அன்புக் கணவரும், ஈவ்லின் வந்தனா (COLOMBO INTERNATIONAL RED CROSS), பிறிசில்லா ரஷ்மி (கொழும்பு), ஜோர்டானா ரூப்மிலா (Teacher, St.John's Parish Nursery), ஜொஹானன் அனுஷ்மன் (DISTRICT OFFICER-'CHA') ஆகியோரின் அன்புத் தந்தையும், சேனக்க பண்டார திசாநாயக்க (HRC, COLOMBO), பரமநாதன் ரூபேந்திரன் (FORUT COLOMBO) லெனின் கிறெகறி (Bastian Hotel) ஆகியோரின் மாமனாரும் ஏரன் மெல்வின் (SJC), அபிகேல் ரிகேஷா, ஆராதனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நீல்லடக்க ஆராதனை நாளை (09.12.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்

இல.16, சோமசுந்தரம் அவெனியூ,
சுண்டுக்குளி.
தொ.பே. 222 5031

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.
(80547)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் திருக்குறள் மனைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன், கொண்டலடி விநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள் ஆகியோர் உரையாற்றுவதையும் மேல் வரிசையில் உள்ள நான்கு படங்களிலும் காணலாம்.

புலமைப் பரிசிலில் வெற்றிபெற்ற மாணவிக்கும், திருக்குறள் மனனப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற மாணவனுக்கும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயம் பதக்கம் அணிவிப்பதை நான்காம், ஐந்தாம் படங்களிலும், கௌரவிப்புப் பெற்ற மாணவர்களையும், விருந்தினர்கள் மற்றும் பெற்றோரையும் கீழ் வரிசையில் உள்ள படங்களில் காண்கிறீர்கள்.

(படங்கள்: லக்ஷ்மன்)

## ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சை இன்று ஆரம்பம்

அச்சுவேலி, டிசெ. 08

ஜீ.சி.ஈ. சாதாரண தர பரீட்சைகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் நாடளாவிய ரீதியில் 4,733 பரீட்சை நிலையங்களில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இந்த வருடம் பரீட்சைக்கு 5 லட்சத்து 36 ஆயிரத்து 905 மாணவர்கள் தோற்றுகின்றனர்.

புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்டம் என்ற வகையில் இரண்டு வகையான பாடத்திட்டங்களுக்கு மாணவர்கள் தோற்றுகின்றனர்.

புதிய பாடத்திட்டத்தின் கீழ் 2 லட்சத்து 93 ஆயிரத்து 297 பேர் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். புதிய பாடத்திட்டத்தில் பரீட்சை எழுதுபவர்களுக்கு 2,664 பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள் ளன.

பழைய பாடத்திட்டத்தின் கீழ் 2 லட்சத்து 43 ஆயிரத்து 608 பேர் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். பழைய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கு 2,069 பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 193 பரீட்சை நிலையங்கள் செயற்படுகின்றன. யாழ். மாவட்டம், இரண்டு பரீட்சை வலயங்களாகப் பிரிக்கப்பட்டு யாழ்ப்பாணம் Iஇல் 83 பரீட்சை நிலையங்களும், யாழ்ப்பாணம் II இல் 110 பரீட்சை நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன.

பரீட்சை நிலையங்களுக்கான சேவைகளை வழங்குவதற்கு 26 ஒருங்கிணைப்பு நிலையங்களும் இரண்டு சேகரிப்பு நிலையங்களும் செயற்படுகின்றன.

இம்மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை வரை 10 தினங்களுக்கு பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

பரீட்சை தொடர்பான உடனடித் தேவைகளை நிறைவு செய்வதற்கு பரீட்சார்த்திகள் மற்றும் பொதுமக்கள் 0112784208, 0112784537 என்ற தொலைபேசி இலக்கங்களுடனும் 0112784537 தொலைநகல் மூலமும் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (202-11)

## பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், டிசெ. 08

பேராதனைப் பல்கலைக்கழகம் நடத்தும் கலைமுதல் தேர்வு வெளிவாரிப் பரீட்சைகள் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இருந்து இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைகள் யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம்பெற உள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (202-250)

## மாவட்ட கணித, விஞ்ஞானப் போட்டிகளில் வடமராட்சி வலயத்தில் 26 மாணவர்கள் சித்தி

கரவெட்டி, டிசெ.8

யாழ்.மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட கணித, விஞ்ஞானப் போட்டிகளில் வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த 26 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்களின் விவரம் வருமாறு:

எஸ்.ஆர்த்திகாஜினி (நெல்லியடி ம.ம. வித்தி.), கே.மதனாகரன் (நெல்லியடி ம.ம. வித்தி.), ஆர்.ரம்மியா (பருத்தித்துறை மெ.ம.பா.), கே.கமலவாசன் (கம்பர்மலை வித்தி.), எம்.துஷிதா(நெல்லியடி ம.ம. வித்தி.), யு.நிவேதா(பருத்தித்துறை மெ.ம.பா.), ரி.துவாரகா (நெல்லியடி ம.ம. வித்தி.), பி.றூபிசானுஷா (வட. இந்து. ம.க), தே.வினோதா (நெல்லியடி ம.ம. வித்தி.), ரி.பிரதீப் (நெல்லியடி ம.ம. வித்தி). கே.தனிறோஜன் (உடுப்பிட்டி அ.மி.க.), எஸ்.சுபவாகினி (வடமராட்சி ம.ம.க.), எம்.ஆர்தனா (பருத்தித்துறை மெ.ம.க.), வி.சங்கீதா (பருத்தித்துறை மெ.ம.க.), கே.மதனாகரன் (நெல்லியடி ம.ம.வித்தி.), கே.கபிலன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), எஸ்.தினேஸ் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), பி.சர்மிளா (பருத்தித்துறை மெ.ம.க.), நி.றிஜிதா (வடமராட்சி இந்து ம.க.), ரி.மைதிலி (பருத்தித்துறை மெ.ம.க.), எம்.ஆரணி (நெல்லியடி ம.ம. வித்தி.), ரி.கோகுலன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), எ.பிரியங்கா (வட. இந்து ம.க.), எஸ்.தர்சிகா (வட. இந்து ம.க.), ஈ.றஞ்சினி (விக்னேஸ்வராக் கல்லூரி), எஸ்.சோபினி (பருத்தித்துறை மெ.ம.க.). (202-70)

## தந்தையைக் காட்டிக் கொடுத்த கைக்குழந்தை!

யாழ்ப்பாணம், டிசெ. 08

கசிப்பு வழக்கொன்றில் தேடப்பட்டு தலைமறைவாகியிருந்த எதிரியை அவரது கைக்குழந்தை நீதிமன்றத்தில் வைத்துக் காட்டிக் கொடுத்தது.

உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் 2007ஆம் ஆண்டிலிருந்து கசிப்பு வழக்கொன்றுக்காகத் தேடப்பட்டு வந்தார். அதையடுத்து அவர் தலைமறைவாகியிருந்தார்.

அவரது மனைவியும் கசிப்பு வழக்கொன்றுக்காக அண்மையில் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். இவருக்கு மல்லாகம் நீதிவான் 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். அதைக் கட்டத் தவறின் 6 மாத சிறைத்தண்டனை அனுபவிக்க உத்தரவிட்டார்.

கைக்குழந்தையுடன் சிறைச்சாலையில் இருந்த மனைவியை கடந்த வியாழக்கிழமை மீண்டும் நீதிமன்றில் ஆஜர் செய்தனர். அதன்போது கணவரும் யாரும் அறியாமல் நீதிமன்றுக்கு வந்து வழக்கு விசாரணைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

அந்நேரம் மனைவி வைத்திருந்த கைக்குழந்தை தந்தையைப் பார்த்து அழ ஆரம்பித்துள்ளது. அதனை அவதானித்த மதுவரித் திணைக்களத்தினர் குறிப்பிட்ட நபரை லாவகமாக மடக்கிப் பிடித்தனர்.

அவரும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவருக்கும் நீதிவான் 15 ஆயிரம் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (202)

## வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் பதிவு அலுவலகம்

கரவெட்டி, டிசெ. 08

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு அலுவலகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி செயலர் பிரிவில் பிறப்பு, இறப்பு, விவாகம் என்பன பதிவு செய்தல் மற்றும் பிரதி செய்து பெற்றுக்கொள்ளல் தொடர்பான செயற்பாடுகளுக்கான புதிய செயலகம் நாளை மறுதினம் புதன்கிழமை பருத்தித்துறைப் பிரதேச செயலத்தில் இயங்கவுள்ளது.

எனவே மேற்படி விடயங்கள் சம்பந்தமான தேவைகளை பொதுமக்கள் இலகுவான முறையில் பெற்றுக்கொள்ள முடியும் என பருத்தித்துறை பிரதேச செய லர் இரா.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (202-70)

## குழந்தையைத் தூக்கிச் சென்று சங்கிலியை அபகரித்த பெண் இப்போது விளக்க மறியலில்

யாழ்ப்பாணம்,டிசெ.8

இணுவில் பிரதேசத்தில் நகைக்காகக் குழந்தையைத் தூக்கிச் சென்று அதன் கழுத்திலிருந்த சங்கிலியை அபகரித்துவிட்டு பாழுங்கிணற்றின் அருகில் குழந்தையை விட்டுச் சென்ற பெண் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் இவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆஜர் செய்யப்பட்டார். இவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 3 ஆம் திகதி காலை 9 மணியளவில் இணுவில் பகுதியில் குழந்தையொன்றைக் கடத்திச் சென்ற பெண் அதனைப் பாழும் கிணற்றுக்கு அருகில் விட்டுவிட்டு அதன் கழுத்திலிருந்த 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளார்.

குறிப்பிட்ட பெண்ணை சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் தேடுதல் நடத்திக் கைது செய்தனர். அப் பெண்ணிடம் இருந்து களவாடப்பட்ட சங்கிலியும் மீட்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்துத் தெரிவித்த பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் ஒன்றையும் விடுத்துள்ளனர்.

குறிப்பிட்ட குழந்தையைப் பாழும் கிணற்றின் அருகில் அப்பெண் விட்டுச் சென்றிருந்தார். குழந்தை தவறிக் கிணற்றுக்குள் விழுந்திருந்தால் [illegible] பெற்றோர் குழந்தைகள் தொடர்பாக அதிக கரிசனையுடன் செயற்பட வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (202)

## உள்ளூராட்சித் திணைக்களங்களும் நிறுவனங்களும் உற்பத்தித்திறனை அதிகரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 08

உள்ளூராட்சித் திணைக்களங்கள், உள்ளூராட்சி அமைப்புக்கள் என்பன தமது உற்பத்தித் திறனை அதிகரித்தல், செலவுகளைக் குறைத்தல் போன்ற விடயங்களை நோக்காகக் கொண்டு நடவடிக்கைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

பின்வரும் நடைமுறைக்கேற்ப இத்திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

* குளிரூட்டிகளுக்கு வெப்பநிலை ஒழுங்குபடுத்துமானி பொருத்துதல்
* வாகனங்களைத் தனித்தனியாக பாவிக்காது குழுக்களாகப் பாவிப்பதன் மூலம் எரிபொருள் சிக்கனத்தையும், வாகனச் செலவுகளையும் குறைத்தல்
* அலுவலகங்களில் மின்சார பாவனையைக் குறைத்து மீதப்படுத்தல்
* தகவல் தொழில்நுட்பங்களை பயன்படுத்திப் பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குதல்
* ஊழியர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கப் பயிற்றுவிப்பதற்கான அலகினை நிறுவுதல்
* ஊழியர்கள் சுறுசுறுப்பாக வேலை செய்யும் நேரம் பற்றி ஆய்வு செய்தல்
* வரவின்மையை நீக்கி உற்பத்தித் திறனுடைய கலாசார நிறுவனமாக மாற்றுதல் - ஆகிய விடயங்களைக் கவனத்தில் கொண்டு செயற்பட ஜனாதிபதி செயலணிக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளன. (202-131)

## திருக்கார்த்திகைத் திருவிழா

சுழிபுரம்,டிசெ.8

சர்வாலய தீபமும் திருக்கார்த்திகை உற்சவமும் எதிர்வரும் வியாழக்கிழமை சகல முருகன் ஆலயங்களிலும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் சனிக்கிழமை விநாயகா விரத அபிஷேகமும் இடம்பெறும். (202-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்குள்ளேயே கப்பல் ஓட்டிய முதலாவது தமிழன் நானாகத்தான் இருக்க முடியும் ... காகிதத்தில்...!



கடந்த வாரம் யாழ்ப்பாணக் குடாநாட்டை உலுக்கிய வெள்ளப் பெருக்கு மற்றும் 'நிஷா' புயலாலல் பாதிக்கப்படாதவர்கள் எவருமில்லை. அந்த வகையில் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு அனுபவங்கள். எழுத்தாளர் பொ.சண்முகநாதன் [சண் அங்கிள்] தமது அனுபவத்தை நகைச்சுவை கலந்து வடித்திருக்கும் நடைச் சித்திரம் இது. கலாபூஷணம் விருதுக்குத் தெரிவான கையோடு அவர் எழுதிய முதலாவது ஆக்கமும் இதுவே.

''நான் பார்த்த படம்'' ''நான் படித்த புத்தகம்'' இந்த வகையான தலைப்புக்களிலே நாம் அந்தக்கால பள்ளி வாழ்க்கையிலே கட்டுரைகள் எழுதிப் பார்த்ததுண்டு. இந்தச் சித்திரத்துக்கு அப்படியொரு பொதுத் தலைப்பிடுவதென்றால்.... அது ''நான் பார்த்த வெள்ளம்'' என்பது பொருத்தமாக இருக்கும்.

வேறு பிரதேசங்களிலேதான் அவ்வப்போது வெள்ளப்பெருக்கு போன்ற அவலங்கள் நிகழ்வதுண்டு. 'சுனாமி' அலைகள்கூட நமக்குத் தூரப்பார்வைதான். என்னைப் பொறுத்தவரை 1995 இல் நிகழ்ந்த மாபெரும் இடப்பெயர்வைக்கூட நான் கொழும்பிலே பாதுகாப்பாக இருந்துகொண்டு படத்திலேதான் (தொலைக்காட்சி) பார்த்தேன்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் என்றும் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் என்றும் இப்படியொரு சூறாவளி-பெரும்மழை எற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப் பார்க்கும்போது குறைந்தது அடுத்த இருபது ஆண்டுகளுக்கு குடாநாட்டிலே புயல்-வெள்ளம் அபாயம் இல்லை என்று எதிர்வு கூறலாமா...? பிறர் துன்பம் கண்டு சிரிப்பது மனிதாபிமானமாகாதுதான். ஆனால் தனக்கேற்பட்ட துன்பத்தை நகைச்சுவை உணர்வுடன் ஏற்றுக்கொள்வதில் தவறில்லைத்தானே!

கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை அந்த அடைமழை. எமது பகுதியையும் கடுமையாகத் தாக்கத் தொடங்கிவிட்டது. ஏற்கனவே குடாநாட்டின் பல பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கு-குடும்பங்கள் இடம்பெயர்வு எனச்செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன.

விடிந்ததும் வெளியே வந்து பார்த்தபோது வீட்டு வாசலின் முதற்படியை மேவிவெள்ளம் நின்றது. நண்பகலைத் தாண்டியவேளை இரண்டாம் படிக்கும் அது ஏறிவிட்டது. இன்னும் சில அங்குலங்களுக்குப் பின்னர் வீட்டுக்குள் வெள்ளம் வரலாம் என்ற நிலை. அதற்கு இன்னும் எவ்வளவு நேரமாகலாம் என்பதையறிய நான் அளவு நாடாவும் கையுமாக..... இன்னும் இரண்டங்குலம்தான் பாக்கி... அது மேலும் ஒன்றரை ஒன்று என்று குறைந்து கொண்டிருக்கிறது. மீண்டும் அளவு நாடாவைப்பிடித்துப் பார்க்கிறேன்..... இன்னும் அரை-கால் என்பதாகத் தளம்பிக் கொண்டிருக்கிறது. முன் வீட்டுக்காரர்கள் குரல் கொடுக்கிறார்கள். ''எப்படி இருக்கிறீர்கள்?''

''வெள்ளம் வீட்டுக்குள் நுழைய ஆயத்தம். உங்கள் பாடு எப்படி?''

''இங்கு ஏற்கனவே வந்துவிட்டது. எல்லாரும் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள்தான் என்ன செய்வதென்று விழித்துக் கொண்டிருக்கிறோம்'' பதில் வருகிறது.



மக்களை உலுக்கிய கார்த்திகை வெள்ளமோ, வெள்ளம்!

அவர்களின் வீடு சுன்னாகம்-கந்தரோடை பிரதான வீதியை ஒட்டிய றோட்டுக்கரை வீடு அதற்குப் பின்னால் எங்கள் வீடு.

எங்களில் நான் மனைவி, மச்சாள், மாமா என்று நான்கு பேர்கள். ஒவ்வொருவரும் குறைந்தது ஒன்றுக்குக் குறையாத நோய்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறோம். மாமாவோ தொண்ணூறு வயதைத் தாண்டியவர்; எழுந்து நடமாட முடியாதவர்.

முன்வீட்டிலே அவரின் தங்கை; அவவும் அப்படித்தான். கூடவே ஒரு மகள், மருமகன், பேரன் என்ன ஒற்றுமை பாருங்கள்.

வாசலைக் கவனிக்கிறேன். வெள்ளம் வீட்டுக்குள் வந்தே விட்டது. தண்ணீர் பாம்புபோல எங்கும் ஊர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது. சமையலறை மற்றும் அறைகள் எதையுமே விட்டுவைக்கவில்லை.

முன் வீட்டிலிருந்து மீண்டும் குரல் வருகிறது. ''உங்கள் நிலைப்பாடு என்ன?''

எமது பதில்: ''நீங்கள் என்ன முடிவெடுக்கிறியளோ அதுதான் எங்களது முடிவும். நீங்கள் எங்கே (?) போவதென்றாலும் 'அதை' எங்களுக்கும் சொல்லுங்கோ''

## ''தண்ணீர் மேல் தவம் செய்தாலும் கூட கிடைக்க வேண்டியது வராது'' – என்றனர்

தட்டுத்தடுமாறியபடி குடையும் கையுமாக வெளியே வருகிறேன். முற்றத்திலே முழங்காலளவு வெள்ளம்.... தெருவுக்கு வந்து கேற்றடியில் நின்றதில் என்னால் குளிரைத் தாங்க முடியவில்லை... உடல் நடுங்கிக் கொண்டிருக் கிறது...... மக்கள் சாரி சாரியாக தலைச்சுமையுடனும் பிள்ளை களைச் சுமந்து கொண்டுமாக சுன்னாகம் பக்கமாக நகர்ந்து கொண்டிருந்தனர். வெள்ளம் ஓடுகின்ற 'சோ' வென்ற இரைச்சல் வேறு... தண்ணீர் சிலருக்கு இடுப்பளவிலும் இன்னும் சிலருக்கு தொடையளவிலுமாக இருந்தது.

இளம் பெண்களின் சுருக்குப் பாவாடைகள் அவர்களைச் சுற்றித் தாமரை இலைபோல..... தாமரை இலையில் மலர்ந்த மலர் மொட்டுக்களாக அவர்களும்தான் சென்று கொண்டிருந்தனர்.... ஏற்கனவே கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையிலும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் மக்கள் நிரம்பி விட்டார்களாம். எமக்குச் சற்றுத் தூரத்திலிருந்தவர்களான வைத்தீஸ்வரக் குருக்கள், சிற்பி சரவணபவன்-எல்லாரும் யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்து விட்டதாகத் தகவல் கிடைக்கிறது. எனக்கு அதுவுமொரு 'கையறு' நிலைபோலிருந்தது. நான் வீட்டுக்குள் வந்துவிட்டேன்....

வீடெங்கும் நீக்கமற மூன்றங்குலத் தண்ணீர் நின்றது. ஏற்கனவேயே தரையிலிருந்த நெல்மூட்டை, மற்றுமுள்ள உலர் உணவுப் பொருள்கள் போன்றவைகள் உயரமான கட்டில், மேசை, கதிரைகளில் 'சரியாசனம்' பெற்றுவிட்டன. அப்படிக் கவனிக்காமல் விட்ட செருப்புகள், பாத்திர பண்டங்கள், விறகு தடிகள் வெள்ளத்திலே முற்றத்திலும் வளவிலுமாக மிதந்து கொண்டிருந்தன. உயிரையே துறக்கச் சித்தமாகிவிட்ட எமக்கு இவைகளெல்லாம் ஒரு பொருட்டா? வேறு வகையில் வேறு இடங்களிலிருந்ததெல்லாம் எமக்கும் இப்படி வந்து கொண்டிருந்தனவே!

### காகிதத்தில் கப்பல் செய்தேன்.......

வீட்டிலே இருள்மேலும் சூழ்ந்து கொண்டிருந்தது. இப்படியொரு சூழலில்தான் நிறையப்படிக்கலாம் என்றால்.... மின்சாரமும் ஏற்கனவே நிறுத்தப்பட்டு விட்டதே.... அதனால் எனக்குள்ள ஒரே பொழுதுபோக்கு காகிதத்திலே கப்பல் விடுவதுதான். ஒரு சதுரத்தாளை இரண்டாக மடித்து அதனை மேலும் இரண்டாக மடித்து..... மறந்துபோய்விட்ட அந்த முறையை மேலும் நினைவுக்குக் கொண்டுவந்து ஒருவாறாகக் கப்பல் செய்து நிலத்திலே விட்டேன். அதுதன்பாட்டிலே ஓடிக்கொண்டிருந்தது. கப்பலோட்டிய தமிழன் கதையெல்லாம் ஒருபுறமிருக்கட்டும். வீட்டுக்குள்ளேயே கப்பலோட்டிய முதல் தமிழன் நானாகத்தான் இருக்கவேண்டும்....

### தண்ணீர்மேல் எவ்வளவு சாதனை செய்தாலும் உங்களுக்கு ''அதெல்லாம்'' கிடையாது

இந்த நேரத்திலும் எமக்கு அனுதாபம் தெரிவித்துவிட்டுப்போகச் சிலர் வந்து போனார்கள். ''ஐந்து கண் மதவு திறந்து விட்டார்கள். இனித்தண்ணீர் வற்றிவிடும்'' என்றும் சிலர் சொன்னார்கள். மதவுக் கண்களைத் திறந்துவிட்டால் வெள்ள அபாயம் நீங்கிவிடும் என்றால் நாம் எதற்காக வெள்ளப்பெருக்குக்கு அஞ்சவேண்டும்? இடம்பெயர வேண்டும்? நலன்புரி நிலையங்களை நாடவேண்டும்?

இன்னும் சிலர் சொன்னார்கள்: ''வீட்டை விட்டு வெளியேறி ஏதாவது நலன்புரி நிலையங்களில் தங்கினால்தான் பின்னர் நிவாரணம், நஷ்டஈடு என்று வரும்போது உங்களுக்கும் ஏதாவது கிடைக்கும். மற்றும்படி நீங்கள் எவ்வளவுதான் தண்ணீருக்குமேல் இருந்து 'சாதனை' புரிந்தாலும் அதெல்லாம் கணக்கிலே வராது'' என்று ஏதோ நாம் 'அதற்காகத்தான்'

(10ஆம் பக்கம் பார்க்க)



கொழும்பு முத்தமிழ் மன்றத்தின் அறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா கொழும்பு பிறைட்டன் ரெஸ்ட் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் பிரபல வர்த்தகருமான க.எஸ்.பி.கணேசலிங்கம் ஜே.பிக்கு 'வணிக மாமணி' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. வாழ்க்கைத் தொழில் தொழில்நுட்ப பிரதியமைச்சர் பி.இராதாகிருஷ்ணன் விருது வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## ஊடகங்களுக்கு இடையூறு செய்யேன் நீதிமன்றுக்கு மேர்வின் உறுதிமொழி

கொழும்பு,டிசெ.8

இனிமேல் எந்தவொரு ஊடகத்திற்கோ அல்லது ஊடகவியலாளருக்கோ இடையூறு விளைவிக்க மாட்டேன்

- இவ்வாறு தொழில் அமைச்சர் மேர்வின் சில்வா தமது சட்டத்தரணி ஊடாக நீதிமன்றிற்கு அறிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருபவை வருமாறு:-

'சிரச' தொலைக்காட்சி மட்டுமன்றி வேறு ஊடக நிறுவனங்களுக்கும் இனிமேல் தம்மால் எவ்வித இடைஞ்சல்களும் ஏற்படாதென தாம் உறுதியளிக்கிறார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

களனியில் வைத்து 'சிரச' தொலைக் காட்சி ஊடகவியலாளரைத் தாக்கி வீடியோ கருவிகளைப் பறித்த சம்பவம் குறித்து நடைபெற்ற விசாரணைகளின் போது மேர்வின் சில்வாவின் சட்டத்தரணி இந்த உறுதிமொழியை நீதிமன்றில் முன் வைத்தார்.

அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என தெரிவித்து 'சிரச' தொலைக்காட்சி ஊடகவியலாளரும், எம்.ரி.வி நிறுவனத்தினரும் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனு மீதான விசாரணைகள் எதிர் வரும் 16ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (சி)

## இலவசப் பண்ணிசை வகுப்பு

யாழ்ப்பாணம், டிசெ.8

அகில இலங்கைத் திருமுறை மன்றம் பாடசாலை மாணவர்களுக்காக இலவசத் தேவாரப் பண்ணிசை வகுப்புகளைப் பல இடங்களிலும் நடத்தி வருகிறது.

தேவார இசைமணி, துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் யாழ்.நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் சனி, ஞாயிறு கிழமை தோறும் பிற்பகல் 3.15 மணி முதல் இலவச வகுப்புகளை நடத்தி வருகின்றார். (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்றி தாக்கி இளைஞர் காயம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

காட்டுப் பன்றி தாக்கி இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மட்டுவிலில் இடம்பெற்றது.

வயல் வேலை செய்துவிட்டுப் புல்லுக் கட்டுக் கொண்டு சென்ற வேளையில் இவரைப் பன்றி தாக்கிக் காயப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஆர்.தயாகரன் (வயது 20) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (202-207)

## யாழ்.மரியன்னை பேராலயமும் சேதம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்ப்பாணத்தில் வீசிய நிஷா புயலால் யாழ்.மரியன்னை பேராலயத்தின் கூரைச் சீற்றுக்கள் பல அள்ளுண்டு போயுள்ளன.

இந்த ஆலயத்தின் மணிக்கூட்டுப் பகுதி மற்றும் பக்க ஆலயத்திலும் இக்கோபுர சேதங்கள் காணப்படுகின்றன. (202-51)

## ஒளிவிழா

கட்டைவேலி,டிசெ.8

குடாநாட்டிலுள்ள கிறிஸ்தவ இளைஞர் ஒன்றியங்கள் இணைந்து நடத்தும் வருடாந்த ஒளிவிழா எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்குக் கட்டைவேலி ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை-கட்டைவேலி சேகர முகாமைக்குரு வண.டி. அழகராசா தலைமையில் இடம்பெறும் இந்த ஒளிவிழவை கட்டைவேலி கிறிஸ்தவ இளைஞர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது. (202-275)

## நலன்புரி நிலையங்கள் மூடப்பட்டன

யாழ்ப்பாணம்,டிசெ.8

தென்மராட்சிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த 55 நலன்புரி நிலையங்களில் 40 நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் வழிந்தோடியதையடுத்து நிலையங்களில் தங்கியிருந்த மக்கள் சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பியதால், நலன்புரி நிலையங்கள் மூடப்பட்டுள்ளன என பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

முகாம்களில் தங்கியிருந்த குடும்பங்களுக்குப் பிரதேச செயலகத்தினால் ஆறு நாள்களுக்குச் சமைத்த உணவு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-207)

## சண்டிலிப்பாயில் 628 குடும்பங்களுக்கு உதவி

நவாலி,டிசெ.8

• இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியம் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாயில் பிரதேச செயலர் பிரிவில் 628 குடும்பங்களுக்கு உணவு அல்லாத அத்தியாவசியப் பொருள்களை வழங்கியுள்ளது.

மேலும் 188 குடும்பங்களுக்கு மேலதிகமாக இப்பொருள்கள் வழங்க வேண்டியுள்ளதாகப் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார். (202-100)

## உதவிக் கொடுப்பனவு

கோப்பாய்,டிசெ.8

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரின் டிசெம்பர் மாதக் கொடுப்பனவு கடந்த முதலாம் திகதியிலிருந்து எதிர்வரும் 10 ஆம் திகதி வரை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பிரதேச செயலரின் வேண்டுகோளுக்கிணங்க மேலதிக ஒதுக்கீடாக 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா கிடைத்துள்ளது. இப்பணம் 174 பேருக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-72)

## ஆங்கிலப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.8

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சாவகச்சேரி நகரசபையினால் மாணவர்களுக்கான ஆங்கிலப் போட்டிகள், எதிர்வரும் 12 ஆம் திகதி நகரசபை கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளதாக நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி நடத்தப்படவிருந்த ஆங்கிலப் போட்டிகள் இயற்கை அனர்த்தம் காரணமாகப் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ( 202-207)

# நிஷா சூறாவளி, கனமழையினால் வடமராட்சியில் 46 பாடசாலைகள் சேதம்

வடமராட்சி,டிசெ.8

குடாநாட்டு மக்களை அண்மையில் அவலப்படுத்திய நிஷா காற்று, மழையினால் வடமராட்சிப் பிரதேசத்தில் 46 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன என வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள 67 பாடசாலைகளில் 46 பாடசாலைகள் சேதமடைந்தன. 12 பாடசாலைகளில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்தனர். தற்போது இடம்பெயர்ந்த அனைவரும் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பி விட்டனர் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல பாடசாலைகளுக்குமேல் மரங்கள் விழுந்தும், காற்றினால் அடித்துச் செல்லப்பட்டும் கூரைகள் சேதமடைந்துள்ளன.

சில பாடசாலைகளில் வெள்ளம் பாடசாலைகளுக்குள்ளும், மலசல கூடங்களுக்குள்ளும் புகுந்து சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

(202-236)

# தென்மராட்சியிலும் 'நிஷா'வினால் பாடசாலைகள் பல சேதம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் பல 'நிஷா' புயல் காற்றினால் சேதமடைந்தன.

கைதடி குருசாமி வித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம் ஆகியவற்றின் வகுப்பறைகள் மீது மரங்கள் வீழ்ந்து சேதமடைந்துள்ளன.

வரணி மகா வித்தியாலயம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி, இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆகியவற்றின் கூரைத் தகடுகள் புயல் காற்றினால் அள்ளுண்டு சேதமடைந்துள்ளன.

இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை, கெற்பேலி அ.த.க.பாடசாலை ஆகியவற்றின் சமையலறைகள் வெள்ளத்தில் அள்ளுண்டு சென்றுள்ளன.

இயற்றாலை அ.மி.த.க.பாடசாலையில் கட்டட நிர்மாணப் பணிக்காக வைக்கப்பட்டிருந்த சிமெந்துப் பைக்கற்றுக்கள் வெள்ளத்தில் மூழ்கிப் பழுதடைந்து காணப் படுகின்றன.

(202-207)

# வெள்ளத்தால் இடம்பெயர்ந்தோருக்கு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் உதவி

யாழ்ப்பாணம், டிசெ.8

வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணிகள், குழந்தைகள் ஆகியோருக்கு சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் பால்மா உட்பட சில பராமரிப்பு பொருள்களை வழங்கியுள்ளனர்.

பாலூட்டும் தாய்மாருக்குத் தலா இரண்டு அங்கர் பால்மா பைக்கற்றுக்களும், கர்ப்பிணிகளுக்கு பிரசவப் பராமரிப்பு பொருள்களும், பிறந்த குழந்தைகளுக்குச் சிசு பராமரிப்பு பொருள்களும், ஒரு வயதுக்கும் 3 வயதுக்கும் உட்பட்ட குழந்தைகளுக்கு அங்கர் 1+ பால்மாவும், 4, 5 வயது பிள்ளைகளுக்கு அங்கர் 3+பால்மா மற்றும் ஜீவாகாரம் என்பனவும், சிறுவர்களுக்குப் பாதணிகளும் வழங்கியுள்ளனர்.

அத்துடன் நீர்ச்சிரங்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 'கொண்டிஸ்பளிங்கு', 'ஜென்சன் வயலட்' ஆகியவையும் வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

# கனமழையிலும் திருட்டு

வலி.வடக்கு,டிசெ.8

கடந்த வாரம் பெய்த கனமழையைச் சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள் ஏழாலைப் பகுதியில் உள்ள கடையொன்றை உடைத்து பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

மல்லாகம், ஏழாலை வீதியில் அமைந்துள்ள உத்தமன் சிலைக்கு அருகாமையில் உள்ள கடையிலேயே மழை நேரத்தில் இத் திருட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கடையில் இருந்த பிஸ்கட் வகைகள், அரிசி மூடைகள், சிகரெட், கோதுமைமா உட்பட ஏராளமான பொருள்களும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக ஏழாலை இராணுவ முகாமிலும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(202-86)



அண்மையில் ஏற்பட்ட அடைமழை 'நிஷா' புயல் காற்றினால் சேதமடைந்த பருத்தித்துறை வட.இந்து மகளிர் கல்லூரியின் மண்டபமொன்றையே படத்தில் காண்கிறீர்கள். (218)

# பெண்ணைக் கடத்தியவர்களைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர் படையினர்

யாழ்ப்பாணம்,டிசெ.8

மோட்டார் சைக்கிளில் இளம் பெண் கடத்திச் செல்லப்படுவதை அறிந்த படையினர், துரத்திச் சென்று இளம் பெண்ணை மீட்டதுடன் கடத்திச் சென்றவர்களையும் பொலிஸாரிடம் கையளித்தனர்.

கடந்த வியாழக்கிழமை கொடிகாமம் பாலாவிப் பகுதியைச் சேர்ந்த யுவதி வீதியில் சென்று கொண்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்தோர் யுவதியின் வாய்க்குள் துணியை வைத்து விட்டுக் கடத்திச் சென்றதாகவும், மட்டுவில் தெற்கு, கல்வம் சிவன் கோயிலுக்கு அருகில் உள்ள வயலொன்றில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் இதை அவதானித்து அருகில் உள்ள முகாமுக்கு தெரியப்படுத்தினர் எனவும், உடனடியாகப் படையினர் துரத்திச் சென்று புத்தூர் வண்ணாத்திப் பாலத்தருகில் வைத்து பெண்ணைக் கடத்தியவர்களை மடக்கிப் பிடித்தனர் என்றும் தெரிவிக்கப் பட்டது.

பின்னர் இளம்பெண்ணின் பெற்றோரை வரவழைத்து ஒப்படைத்ததுடன், கடத்திச் சென்றவர்களைக் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 8 பேரைப் பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். (1-207)

## சேதவிவரம் மதிப்பீடு

கோப்பாய்,டிசெ.8

வலி.கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளத்தால் பாதிப்புற்ற சேத அழிவுகள், கிராம அலுவலர் பிரிவு ரீதியாகத் திரட்டப்பட்டு மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(202-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.ப.நோ.கூ. சங்கத்தின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடமாடும் கூட்டுறவுச் சேவை நிலையம் அரச, தனியார் நிறுவனங்களில் இடம் பெற்று வருவதாக சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்துள்ளார்.

கடும் மழை, சூறாவளிக்காற்றினால் கடந்த வாரத்தில் இந்தச் சேவையை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. இந்த வாரத்தில் இருந்து வழமை போன்று தமது சேவைகளை செய்து வருகின்றது.

அரச, தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களின் வசதிகருதி இந்தச் சேவையைச் சங்கம் சிறப்பான முறையில் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சேவை நிலையம் ஊடாக பணியாளர் தமக்குத் தேவையான பொருள்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

இந்த நடமாடும் சேவை நிலையம் பொது மக்களின் இல்லங்களில் இடம்பெறும் சுப காரியங்களுக்கான அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றது. (204-224)

## வீதி புனரமைப்பு

சுழிபுரம்,டிசெ.8

சுழிபுரம் கிராமத்தில் பறாளையிலிருந்து பாண்டவட்டை வரை செல்லும் வீதி துரிதகதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் பெய்த கனமழையால் இவ்வீதி சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (202-28)

## சமுர்த்தி நிவாரண முத்திரைகள் விநியோகம்

நவாலி,டிசெ.8

நவாலி ஜே/135, ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர்கள் சமுர்த்தி நிவாரண முத்திரைகளை அவர்களது அலுவலகங்களில் வைத்துத் தற்போது வழங்கி வருகின்றனர். (202-100)

## ஏகாதசித் தீர்த்தம்

வண்ணை,டிசெ.8

அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலயத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஏகாதசித் தீர்த்தம் நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9 மணிக்கு விஷேட சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து ஸ்ரீமத்நாராயணர் ஏகாதசித் தீர்த்தமாட, பூமாதேவி, ஸ்ரீதேவி சமேதராய் வீதியுலா எழுந்தருள்வார். (202-160)




## இணுவில் பூவோடை மயானம் அபிவிருத்தி

இணுவில்,டிசெ.8

இணுவில் பூவோடை மயான அபிவிருத்திச் சபை, மயானத்தை துரித கதியில் அபிவிருத்தி செய்து வருகிறது.

புயலினால் பாதிக்கப்பட்ட மயானத்து வைரவர் ஆலயத்தையும் சீர்செய்யவுள்ளனர்.

எனவே பொதுமக்கள் இதில் கலந்து தங்கள் பங்களிப்பை வழங்குவதோடு தங்களின் ஞாபகார்த்தமாக நின்று நிலைக்கக் கூடிய மரக்கன்றுகளை மயானத்துள் நாட்டலாம் என அபிவிருத்திச் சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(202-45)

## கருத்தரங்கு

நாவற்குழி,டிசெ.8

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் சமூகசேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான மாதாந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சமூக நலத்துறைத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக மாவட்ட அலுவலர் அ.ஞானவேல் அறிவித்துள்ளார். (204-288)

# ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்
## பழைய மாணவர் சங்கம்
## பொதுக்கூட்டம்

காலம் : 21.12.2008 பி.ப.3மணி
இடம் : கல்லூரி மண்டபம்
அங்கத்தவர்கள் தவறாது சமுகம் தரவும்

அதிபர். (80532) செயலாளர்.



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி முன்னாள் ஆசிரியை
### திருமதி பத்மாவதி குமாரசாமி
அவர்களின் மறைவையொட்டித் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி. கல்லூரிச் சமூகம். (80529)



## 60ஆவது பிறந்த நாள் நினைவு

தோற்றம் 08 * 12 * 1948



மறைவு 19 * 09 * 2000

### அமரர் அந்தோனிப்பிள்ளை அல்பிரட் யோகராஜா
[ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்]

அன்புள்ள அப்பாவே!
ஆயிரம் கனவுகளுடன் - நம்மை
வளர்த்தீர்கள் அப்பா
கனவுகளை நனவாக்கி நிற்கின்றோம்
கண்டு களிக்க வருவீர்களா மறுபடியும்
கண்ணீருடன் கண் கலங்கி காத்து நிற்கின்றோம்.

தகவல்:
சுரேஷ் - சாலி
லண்டன்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன். (80462)


## சண்டிலிப்பாயில் வினாடிவினாப் போட்டி

யாழ்ப்பாணம், டிசெ.8

உலக விஞ்ஞான தினத்தையொட்டி விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சின் அனுசரணையில் சண்டிலிப்பாய் பிரதேசசெயலக விதாதா வளநிலையம் நடத்தும் சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞான வினாடி வினாப் போட்டி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் சென்.ஆன்ஸ் பாடசாலையில் நடைபெறவுள்ளது. பங்குபற்றும் மாணவர்கள் குறித்த நேரத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (1)

## அனலைதீவு இந்து மயானத்தில் சிரமதானப்பணி

யாழ்ப்பாணம், டிசெ.8

அனலைதீவு இந்து மயானத்தில் அண்மையில் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்தப்பணியை ஊர்காவற்றுறை பிரதேச சபைச் செயலாளர் ஏ.கணேசானந்தராசா தலைமையில், இந்தப் பிரதேசசபையின் பொறுப்பதிகாரிகள், ஊழியர்கள், அனலைதீவுப் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து மேற்கொண்டனர். (204-325)

## ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் பயன்தரு மரங்கள் முறிந்தன

யாழ்ப்பாணம், டிசெ.8

அண்மையில் பெய்த கனமழை, 'நிஷா' புயலினால் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் மட்டும் 1500க்கும் மேற்பட்ட பனைமரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

புனித அந்தோனியார் கல்லூரியின் கிறிஸ்து இல்லத்தின் அருகில் 100 வருடங்களுக்கு மேல் இருந்த வாகை மரமும் சரிந்து வீழ்ந்தது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள சில பாடசாலைகளின் ஓடுகள் தூக்கி வீசப்பட்டுள்ளன. (204-325)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

1043 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்




07 24 28 46

05-12-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 500269621 - 500290069

ஜக்பொட் பரிசு ரூபா. 9,770,580/- வெல்லப்படவில்லை



| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 217,015 | 20/- | 4,340,300/- |
| 2 இலக்கங்கள் | 19,867 | 40/- | 794,680/- |
| 1 இல. + லக்கினம் | 19,635 | 60/- | 1,178,100/- |
| 2 இல. + லக்கினம் | 1,861 | 200/- | 372,200/- |
| 3 இலக்கங்கள் | 534 | 1000/- | 534,000/- |
| 3 இல. + லக்கினம் | 44 | 10,000/- | 440,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 9,770,580/- | - |
| மொத்தம் | | | 8,259,280/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 258,964 | | 8,759,280/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 10,255,180/-

தொடர் இலக்கம் 400258823-க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 டிசெம்பர் 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| திருகோணமலை | 500277724-6-21 |
| கண்டி | 500280044-6-30 |
| குருநாகல் | 500273334-4-07 |
| கொழும்பு | 500284222-7-23 |
| மட்டக்களப்பு | 500276759-3-18 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


# ராசி பலன்

08-12-2008 முதல்
14-12-2008 வரை
பொ.சந்திரலிங்கம்




**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வி யில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறா. மன அமைதி இருக்காது.




**கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2**

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்பார்ப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.




**மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3**

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர், தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண தாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




**புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்**

காரியச்சித்தியுண்டு. பிரயாண வாப்புண்டு. பணப்பாற்றக் குறை நிலவும். உறவினர் அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நல முண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முத லீடு களால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் குறயைலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறை வேறா. மன அமைதி இருக்காது.




**மகம், பூரம், உத்தரம் 1**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம்காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. மன அமைதி இருக்காது.




**உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2**

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. நண்பர்களால் தொல்லையுண்டு. மன அமைதி இருக்கும்.




**சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் உதவி செய்யார். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. மன அமைதி இருக்கும்.




**விசாகம் 4, அனுசம், கேட்டை**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நல மில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமணவாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளில் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




**மூலம், பூராடம், உத்தராடம் 1.**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




**உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷடம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறைய லாம். தொழில்துறை முன் னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




**அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3**

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழிற்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. மன அமைதி இருக்காது.




**பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் லாபம் அமைலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தை ஆதரித்துக்கொண்டு ஐ.தே.கட்சி தமிழர்களின் வாக்குகளைக் கோர முடியுமா?

## கேள்வி எழுப்புகிறார் மனோ. எம்.பி.

கொழும்பு,டிசெ.8

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி யுத்தத்தை ஆதரித்துத் தீவிரமாகக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளது. தமிழர்களின் ஆதரவும், வாக்குகளும் ஆளும் கட்சிக்குக் கிடையாது. ஆனால் தமிழர்களின் ஆதரவையும், வாக்குகளையும் எதிர்பார்க்கும் ஐக்கிய தேசியக் கட்சி யுத்தத்தை முற்று முழுதாக ஆதரிக்க முடியாது. இதை ஐக்கிய தேசியக் கட்சி புரிந்துகொள்ள வேண்டும்''



- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அமைப்புகளின் தலைவரும், மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளருமான மனோகணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யுத்த ஆதரவு நிலைப்பாட்டினால் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலே ஏற்பட்டுள்ள சர்ச்சை தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு :-

ஐக்கிய தேசியக் கட்சி யுத்தத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என நாம் உடனடியாக எதிர்பார்க்கவில்லை. அரசின் பாணியிலே தீவிரமாக யுத்தத்தை ஆதரித்து கருத்துகளைத் தெரிவிக்காமல் இருந்திருக்கலாம். ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி நண்பர் ரங்க பண்டார கடந்த இரண்டு வருடங்களில் இராணுவத்தில் 12 ஆயிரம் மரணங்களும், 12 ஆயிரம் காயமடைதல்களும் நிகழ்ந்துள்ளன என்று கூறியிருந்தார். இக் கருத்துகள் யுத்தத்தின் கோர வடிவை அடையாளப்படுத்தின. ஆனால் இன்று ஐககிய தேசியக் கட்சி யுத்தத்தை ஒரேயடியாக ஆதரித்திருப்பது இக் கருத்துகளுடன் முரண்படுகின்றது.

யுத்தத்தினால் துன்பமடையும், தமிழ் மக்களின் மனங்களை இக்கருத்துப் பெரிதும் நோகடிக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் வரலாற்றில் நடைமுறையில் உள்ள ஒரே ஒரு அதிகாரப்பரவலாக்கல் சட்டத்தை அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமாகக் கொண்டுவந்திருந்தது.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியே கடந்த ஆட்சியின் போது போர்நிறுத்த உடன்பாட்டைக் கொண்டுவந்திருந்தது. இத்தகைய காரணங்களினாலேயே ஜனநாயக மக்கள் முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டிணைந்து செயற்படுகின்றது என்பதனைத் தெளிவுபடக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

இன்றைய அரசும் யுத்தத்தைத் தவிர அனைத்துத் துறைகளிலும், தோல்வியடைந்துவிட்டது. யுத்த கோஷம் ஒன்றுதான் இந்த அரசைக் காப்பாற்றிக்கொண்டிருக்கின்றது. அரசு தோல்வியடைந்துள்ள ஏனைய விடயங்களைப் பற்றி சிங்கள மக்களிடம் விளக்கிச் சொல்லத் தேவையில்லை. அது அவர்களுக்கு மிக நன்றாகவே தெரியும்.

எனவே அரசினது யுத்த நோக்கத்தில் உள்ள உண்மை நிலைமைகளை சிங்கள மக்களுக்கு விளக்க வேண்டும்.

யுத்தத்தின் மூலமாக தேசிய இனப்பிரச்சினையும், பயங்கரவாதத்தையும் அழித்துவிட முடியாது என்ற உண்மையை எடுத்துக் கூற வேண்டும். 13 ஆவது திருத்தச் சட்டத்திலே வழங்கப்பட்டுள்ள பொலிஸ், காணி அதிகாரங்களை முழுமையாக மாகாணசபைகளுக்கு வழங்கும்படி நிர்ப்பந்திக்கவேண்டும்.

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு அப்பால் செல்லும் ஒரு அதிகாரப்பரவலாக்கல் அரசியல் தீர்வை முன்வைக்கும்படி அரசை வலியுறுத்தவேண்டும். இதை நாம் தெளிவுபடுத்திக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். யுத்தத்தில் காட்டும் முனைப்பை விடுத்தும் தமிழ், முஸ்லிம் மக்களின் மனங்களை வெல்லும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும்படி எடுத்துக்கூற வேண்டும். இவற்றையே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான கூட்டணி வாக்களிக்கும் என தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்பார்க்கின்றனர் - என்றார். (சி)



தமிழக மக்களால் ஈழத் தமிழர்களுக்கென அனுப்பி வைக்கப்பட்ட உணவுப் பொருள்கள் வன்னியில் மக்களுக்கு வழங்கப்படுகின்ற காட்சி.

### சாதாரணதர மாணவருக்கு மற்றொரு தொகுதி அடையாள அட்டைகள் வந்தன

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகள் மூலம் ஜீ.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் மற்றொரு தொகுதி அடையாள அட்டைகள் - 1118 அடையாள அட்டைகள் - செயலகத்துக்கு நேற்று முன்தினம் கிடைத்துள்ளன.

யாழ்.செயலகத்துக்கு சமூகமளித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை அரச அதிபர் கேட்டுள்ளார். (1)

## இந்தியாவிலிருந்து மன்னாருக்கு

# கடத்திச் செல்லப்பட்ட பீடி வகைகள் மல்லாகம் நீதிமன்றில் வைத்து அழிப்பு

யாழ்ப்பாணம், டிச. 08

இந்தியாவிலிருந்து மன்னாருக்குக் கடத்திச் செல்லும் வழியில் காங்கேசன்துறையில் வைத்து கடற்படையால் கைப்பற்றப்பட்ட 10 லட்சம் ரூபா பெறுமதியான செய்யது பீடிகள் கடந்த வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்றில் வைத்து தீக்கிரையாக்கப்பட்டன.

இந்தியாவிலிருந்து காங்கேசன்துறைக் கடல் வழியாக மன்னாருக்குக் கடத்திச் செல்லும் வழியில் கடத்திச் சென்ற மூவரைக் கடற்படையினர் கைதுசெய்தனர்.

மூவரும் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன. பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். கடத்தல் பொருளையும் பறிமுதல் செய்யப்பட்டன.

பீடிகள் கடந்த வியாழக்கிழமை நீதிமன்ற வளாகத்தில் வைத்து தீக்கிரையாக்கி அழிக்கப்பட்டன.

அவர்கள் பயன்படுத்திய வள்ளம், வெளியிணைப்பு இயந்திரம் என்பவற்றைக் கடற்படையினரிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (202)

# சிங்கப்பூரில் கல்வி பயில விரும்புவோர் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுக!

## வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, டிச. 08

சிங்கப்பூரில் உள்ள கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களிடமிருந்து பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகள் சிங்கப்பூரில் உள்ள இலங்கை தூதரகத்துக்குக் கிடைத்துள்ளன என வெளிவிவகார அமைச்சு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கும் விவரங்கள் வருமாறு :-

* சிங்கப்பூரிலுள்ள பெரும்பாலான நிறுவ னங்கள் கல்வித் தரத்தைக் கொண்டதாக இல்லை. எனினும் கட்டணங்கள் சிங்கப் பூர் டொலர் 4,000 - 7,000 வரை (இலங்கை பெறுமதிபடி ரூபா 3000,000 - 5000,000) ஆறு மாதத்திலிருந்து ஒரு வருடகாலத் திற்கு அறவிடப்படுகின்றன.

கட்டணங்களில் இருந்து குறிப்பிட்டளவு தொகையைப் பெற்றுக்கொள்ளும் இலங்கையில் உள்ள முகவர் நிலையங்களினால் மாணவர்கள் கவரப்படுகின்றனர். தங்களது பாடநெறி பூர்த்தியடைந்ததன் பின்னர் தொழில் வாய்ப்புக்கள் சிங்கப்பூர், மலேஷியா ஆகிய நாடுகளில் கிடைக்கும் என மாணவர்களுக்கு சொல்லப்படுகின்றது.

எனினும், மாணவர்கள் சிங்கப்பூருக்கு வந்த பிறகு பாடநெறியைத் தொடர்வதிலும் தொழில் வாய்ப்புக்களை பெறுவதிலும் விரக்தி மனப்பான்மைக் குட்படக் கூடிய நிலை ஏற்படுகின்றது. அவர்கள் இலங்கையிலுள்ள முகவர் நிலையங்களினால் தவறாக வழிநடத்தப்பட்டவர்களாகின்றனர்.

சிங்கப்பூரில் உள்ள கல்வி நிறுவனங்களுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ள இலங்கையின் முகவர்கள் பொய்யான வாக்குறுதிகளை மாணவர்களுக்கு வழங்குகின்றார்கள்.

பெரும்பாலான பாடநெறிகள் சுற்றுலா, விருந்தோம்பல், உணவு மற்றும் பான வகைகள் ஆகியவற்றை கொண்டதாகவே காணப்படுகின்றன.

சிங்கப்பூரில் கல்விப் பயிலுவதற்காக முகவர்களின் உதவியை நாடும் தகுதி வாய்ந்த மாணவர்கள் முன்னெச்சரிக்கையுடன் கல்வி நிறுவனங்களின் நம்மகத்தன்மை குறித்து கவனமாக செயற்படுமாறு சிங்கப்பூரில் உள்ள இலங்கை தூதரகம் கடுமையாக வலியுறுத்தியுள்ளது.

அங்கு தொழில் வாய்ப்புக்கள் குறித்தும் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தியுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இலங்கைத் தூதரகம் அல்லது உயர் கல்வியமைச்சு ஆகியவற்றின் உதவிகளைப் பெற முடியும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (202)

# தென்மராட்சியில் 17பேருக்கு சுயதொழில் கொடுப்பனவு

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 17 பேருக்கு சுயதொழில் நிவாரணத்தின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை பிரதேச செயலகத்தில் வழங்கப்படவுள்ளது.

வடமாகாண சமூக நலத்துறை திணைக்களத்தினால் இக்கொடுப்பனவுக்குரிய காசோலைகள் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு ஆகிய சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவோருக்கே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

பின்வருவோர் தேசிய அடையாள அட்டை, குடும்ப பங்கீட்டு அட்டை ஆகியவற்றுடன் வருகை தருமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

இ.மங்கையர்க்கரசி-கைதடி நுணாவில், க.வேல்விழி- மந்துவில் கிழக்கு, க.செல்லம்மா-சரசாலை தெற்கு, ப.யோகாம்பிகை-புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி, கி.மல்லிஸ்வரி- மறவன்புலோ, [illegible]- கண்டிவீதி, சாவகச்சேரி, க.மனோன்மணி-மிருசுவில் தெற்கு, ந.சரஸ்வதி-பழைய வாய்க்கால் மிருசுவில், செ.நாகேஸ்வரி-மிருசுவில் தெற்கு, வ.விஜிதா- மீசாலை வடக்கு-

ம.கதிர்காமினி-தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, ச.பராசக்தி-கெற்பேலி மேற்கு, தே.ஞானேஸ்வரி- சரசாலை தெற்கு, அ.தங்கமலர்-கைதடி தெற்கு, ம.விமலா தேவி- சங்கத்தானை, இ.இராசேஸ்வரி- தச்சன்தோப்பு, இ.தவமணிதேவி- கல்வயல். (202-207)

## நிவாரண உதவி

வண்ணை, டிசெ.8

ஐ.நா அபிவிருத்தி நிறுவனம் வழங்கிய உலர் உணவு அல்லாத நிவாரணப் பொதிகளையாழ்.பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மட்டத்தில் பங்குத்தந்தைகளின் ஊடாக கரித்தாஸ்-கியூடெக் நிறுவனம் வழங்கி வருகிறது.

இப்பொதிகளில் துவாய், படுக்கை விரிப்பு, பாய், சவர்க்காரம் மற்றும் பிளாஸ்ரிக் போத்தல், வாளி என்பன அடங்கி உள்ளன.

இதுவரை 450க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன என நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

எஞ்சிய பொதிகளும் பங்குத் தந்தையர் மூலமாக தொடர்பு கொள்கின்ற பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (202-160)

## தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.8

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், மானிப்பாய் ஆகிய நிலையங்களில் தொழில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் 'மாகாணப் பணிப்பாளர், NAITA, இல.7, கோவில் வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## காரைநகரில் மாணவர் ஊக்குவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 05

காரைநகர் மத்தி மேம்பாட்டுக்கழகத்தின் கூட்டமும் மாணவர் ஊக்குவிப்பு நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

மேம்பாட்டுக் கழகத் தலைவர் ந. கிருஸ்ணபவான் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலனும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவுத் திணைக்களப் பரிசோதகர் வை.கைலாயநாதன், ஊர்காவற்றுறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரன், யாழ்ற்றன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

காரைநகர் பிரதேச பாடசாலைகளில் கல்வி பயின்று தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 17 மாணவர்களுக்கு வங்கியில் பணம் வைப்பிலிடப்பட்டு இந்த நிகழ்வில் வைத்து சேமிப்பு புத்தகம் வழங்கப்பட உள்ளது. சிறந்த முகாமைக்குழு உறுப்பினர்களும் கௌரவிக்கப்பட உள்ளனர்.

(202-50)

## தீவகப் பாடசாலைகளில் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு

தீவகக் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள், கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள் தமது கடமையேற்றல் கடிதம், நியமனக் கடிதப் பிரதி, கல்விச் சான்றிதழ் என்பவற்றுடன் இன்று திங்கட்கிழமை வலயத்திற்கு சமூகமளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (202)

## காலாவதியான மென்பானங்கள் அழிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

மீசாலையில் வர்த்தக நிலையமொன்றில் கலாவதியான மென்பானங்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

ஒன்றரை லீற்றர் கொள்வனவு கொண்ட 61 மென்பானப் போத்தல்கள் சுகாதாரப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவகப் பாடசாலைகளுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.8

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளின் 2009 ஆம் ஆண்டுக்கான இலவசப் பாடநூல்களை நாளை மறுதினம் புதன் கிழமை கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே ஒரு தொகைப் பாட நூல்கள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. மிகுதியான பாடநூல்களையே பெற்றுக் கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (202)

## துடுப்பாட்டப் பயிற்சி முகாம் விரைவில்

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ்.மாவட்டத் துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் துடுப்பாட்ட வீரர்களுக்கான உடற்தகுதிப் பயிற்சி முகாம் விரைவில் நடைபெறும் எனச் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி முகாம் கடந்த மாதம் 29ஆம் திகதி நடைபெறவிருந்தது. பின்னர் சீரற்ற காலநிலையால் ஒத்திவைக்கப்பட்டது. இந்தப் பயிற்சி முகாம் விரைவில் நடைபெறும் எனவும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் செயலாளர் மேலும் தெரிவித்தார். (50)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## 2009ஆம் ஆண்டுக்கான வழங்குனர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருள்களையும், சேவைகளையும் வழங்குவதற்குத் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள் உற்பத்தியாளர்கள் ஒப்பந்தக்காரர் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் 31.03.2009ஆம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பொருள்கள்**

01.காகிதாதிகள், எழுதுபொருள்கள்
02.அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள், இரும்பு அலுமாரி)
03.மேல்நாட்டு மருந்துவகைகள், வைத்திய உபகரணங்கள்
04.சித்த மருத்துவ மருந்துகள்
05.கோலவுடைத் துணிகள், யன்னல் துணிகள் ஏனைய துணிவகைகள்
06.பாதணிகள், மழைக்கவசம், மற்றும் தோல்பொருள்கள்
07.கட்டடப் பொருள்கள் (சிமேந்து, ஓடுகள் முதலியன)
08.தீந்தைகள், நிறந்தீட்டும் பொருள்கள் முதலியன
09.கற்கள், மணல்கள்
10.நீர் வழங்கு பொருள்கள், பி.வி.சி குழாய்கள் முதலியன
11.வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள்
12.மின்சார இயந்திரப் பொருள்கள், மின்கருவிகள்
13.விறகு, தேங்காய் மட்டை, கிடுகுகள்
14.எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ்
15.இரும்புப் பொருள்கள்
16.பனைமரங்கள், சலாகைகள்
17.நூலகங்களுக்குரிய நூல்கள்
18.வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர்கள், ரியூப் முதலியன
19.தீராந்திகள், நீப்பைகள், பலகைகள்
20.தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கால்துடைப்பம், இழைக்கயிறு, தேடாக்கயிறு முதலியன.
21.சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமிநாசினிகளும், மருந்துகளும்
22.கணனி, கணனிகளுக்கான உதிரிப்பாகங்கள்,போட்டோ பிரதி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரங்களிற்கான உதிரிப்பாகங்கள் (கவொக்,சார்ப் வகைகள்) வழங்கல்

**சேவைகள்**

01.அச்சிடுதல்
02.தட்டச்சு இயந்திரம் திருத்தல்
03.மோட்டார் வாகனம் திருத்தம்
04.ரியூப் ஒட்டுதல்
05.ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
06.ஏற்றியிறக்கும் வேலைகளிற்குப் பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல்
07.சுத்திகரிப்பு, ஏற்றியிறக்கல் வேலைக்கு ரக்ரர் வாடகைக்கு விடல்
08.கோலவுடை தைத்தல்
09.மின் மோட்டார்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தம்
10.மின்கலங்களிற்கு மீள மின்வலுவூட்டல்
11.றப்பர் முத்திரை தயாரித்தல், ளொ தயாரித்தல்
12.வாகனங்கள் சேர்விஸ் செய்தல்
13.கணனி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம், சேர்விஸ் செய்தல்

கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் ''வழங்கல்கள், சேவைகள் 2009'' எனக்குறிப்பிட்டுப் பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

''வழங்கல்களுக்கும், சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் ஆணையாளர், மாநகரசபை யாழ்ப்பாணம்'' என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல், சேவைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்களை யாழ்.மாநகரசபை கொள்வனவுப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக்கட்டணமாக ரூபா 500/= உடன், மேலதிகமாக ''வற்'' வரி ரூபா 75/= உட்பட ரூபா 575/= பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளை ''ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்'' என்ற பெயரிற்குப் பெறப்பட்டு இணைத்து அனுப்பிவைக்க வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் சபையின் நானாவித இறைவரிக் கிளையில் நேரடியாக வேலைநாள்களில் செலுத்த முடியும்.

கூறு விலைகள் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து கோரப்படும். கோரப்படும்போது கூறுவிலைகளை சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருள்கள்/சேவைகள் வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/சேவைகள் வழங்கும் எந்த ஒரு வழங்குனரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றிப் பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்கப்படும்.

செ.சரவணபவ
மாநகர ஆணையாளர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

திகதி: 05.12.2008 (555888)

## வீட்டுக்குள்ளேயே கப்பல்....

(06ஆம்பக்கத் தொடர்ச்சி)

அப்படித்தவம் செய்கிறோம் என்பது அவர்களின் நினைப்புப்போலும்.

எல்லாருக்கும் ஒரே பதிலாகச் சொன்னோம். ''வீட்டுக்குள்ளே ஆக ஐந்தங்குல வெள்ளம்தான் நிற்கிறது. வெளியிலே முழங்காலளவு தொடையளவு, இடுப்பளவு என்றெல்லாம் ஓடிக்கொண்டிருக்கிறது. எங்களுக்கோ 'நீச்சல்' தெரியாது''

இந்த நேரம் பார்த்து எங்களுக்குச் சற்றுத்தூரத்திலேயிருந்து கௌசி என்பவளும் வந்து விட்டாள். தங்களுக்கும் 'இதுதான்' நிகழ்ந்து கொண்டிருப்பதாகவும் எங்களின் துணிச்சலைக் கேள்விப்பட்டு எங்களுடன் தங்கலாம் என்று வந்துவிட்டதாகவும் சொன்னாள். அவள் தனது பெரியப்பா-பெரியம்மாக்களுடன் தங்கியிருப்பவள். அவர்களை முன் வீட்டிலே விட்டிருப்பதாகச் சொன்னாள் (பாவம்,அவர்களுக்கும்'துணை' தேவைதானே!)

நாங்கள் 'ஐவர்' ஆனோம். எதிர்காலக் கனவுகள்-கற்பனைகளுடனுள்ள அந்த இளநங்கை எங்களுடன் சேர்ந்து 'சிவபதம்' அடையத் துணிந்து விட்டபோது எமக்கும் ஒருவிதத்திலே ஆறுதலாக இருந்தது. அவள், தான் சமீபத்திலே இந்தியா சென்று வந்த அனுபவங்களை அந்த இரவு முழுவதும் எங்களுடன் பகிர்ந்து கொண்டிருந்தாள்.

அவர்கள் கதையோடு கதையாக அடிக்கடி தண்ணீர் மட்டம் மேற்கொண்டு உயர்கிறதா, நெல்மூட்டை, மற்றுமுள்ள உலர் உணவுப் பொருள்கள் 'விக்கினங்கள்' இல்லாமல் இருக்கின்றனவா என்பதை விளக்கு வெளிச்சத்திலே கவனித்துக் கொண்டிருந்தனர். நான் எனது புத்தக அலுமாரியையும் அதற்குமேல் ஏற்றிவைத்த முக்கிய ஆவணங்கள்-கோவைகளையும் கவனித்துக் கொண்டிருந்தேன். நல்ல காலமாக அலுமாரியின் அடித்தட்டுக்குக் கீழேதான் வெள்ளம் நின்றது.....

* *

வியாழக்கிழமை மழை ஓரளவு விட்டிருந்து. வெறும் தூறல்தான். தொலைபேசி இயங்கியபோதிலும் மின்சக்தியைக் காட்டும் குறியீட்டில் ஆக ஒரேயொரு கோடுதான் இருந்தது. அதனால் தண்ணீரிலே நின்றவாறு ('தண்ணியிலை' அல்ல) அவசர அவசரமாக உறவினர்களுக்கும் தெரிந்தவர்களுக்கும் நாம் 'தப்பிப் பிழைத்த' சங்கதிகளை எல்லாம் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். சிற்பி ஐயா-வைத்தீஸ்வரக் குருக்கள் போன்றவர்களின் தொலைபேசிகள் 'பேச' மறுத்து விட்டன. அந்தோ! மின்சக்தியைக் காட்டும் அந்தக் கடைசிக் கோடும் மறைந்து விட்டது. இருந்தாலும் அவ்வப்போது அழைப்புக்கள் வந்து-போய்க்கொண்டுதான் இருந்தன. சக்தி குறைந்து விட்டது (Battery Low) என்ற எச்சரிக்கை வேறு...

வெள்ளிக்கிழமை காலை வைத்தீஸ்வரக் குருக்களின் மகளின் அழைப்பு (எதையும் முந்தித் தருகின்ற 'உதயன்' அவர்களுக்கு எனக்கு முன்னர் கிடைத்து விட்டது) ''உங்களுக்கு '.....விருது' கிடைத்திருக்கிறது; உதயன் பேப்பரிலை வந்திருக்குது. இதோ அப்பா பேசுகிறார்.....'' என்கிறார். மதிப்பார்ந்த வைத்தீஸ்வரக் குருக்கள் தமது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக் களையும் தெரிவித்து மகிழ்கிறார். தொடர்ந்து மூதறிஞர் சிற்பி- சிவசரவணபவனின் வாழ்த்துக்கள் மொத்தத்திலே நான் வாழ்த்து மழையில் நனைந்து கொண்டிருந்தேன்....

'அதென்ன விருது' என்றுதானே கேட்கிறீர்கள். நிச்சயமாக அது நான் தண்ணீருக்குமேலே இருந்து மேற்கொண்ட தவத்துக்குக் கிடைத்த விருதல்ல.

பி.கு: கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி 'நிஷா' சூறாவளி-பெருமழை காரணமாக யாழ்.குடாநாட்டிலே மொத்தம் ஏழு பேர்கள் உயிரிழந்தனராம். அதிலே எங்கள் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ***

## சுகவனிதையர் பரிசோதனை முகாம்

இணுவில்,டிசெ.8

இணுவில் வடக்கு, கிழக்கு குடும்பநல உத்தியோகத்தர் பிரிவுக்கான சுகவனிதையர் பரிசோதனை முகாம் எதிர்வரும் 11 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு கலாஜோதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த காலங்களில் மத்திய மருந்தகங்களில் நடைபெற்றுவந்த கிளினிக்குகளை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடன் கிராம மட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றன.

சலம், இரத்தம் பரிசோதனையுடன் நீரிழிவு, புற்றுநோய், குருதியமுக்கம், கர்ப்பப்பை சம்பந்தமான வியாதிகள் மற்றும் பெண்களுக்கு ஏற்படும் அனைத்து வியாதிகளையும் கண்டறியும் நோக்கில் குடும்ப நல மருத்துவ மாதர்களால் இப்பரிசோதனை முகாம் நடத்தப்படவுள்ளது.

35 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பெண்களையும் இப்பரிசோதனை முகாமுக்கு வருகைதந்து, பரிசோதனையை மேற்கொண்டு, சுகவனிதையர்களாகத் திகழு[illegible] உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (202-45)

## கண்ணீர் அஞ்சலி



### செல்லையா சபாலிங்கம்
(இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர், முல்லைத்தீவு)

எமது கிளையில் பாதுகாப்பு ஊழியராகக் கடமை புரியும் திரு.செ.துஸ்யந்தன் அவர்களின் அன்புத் தந்தையும் முன்னாள் எமது கிளையின் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றியவருமான செல்லையா சபாலிங்கம் 05.12.2008 அன்று இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்,
இலங்கை வங்கி, பருத்தித்துறை.

(சி/555910)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 15 * 06 * 1922



விண்ணில் 08 * 11 * 2008

### அமரர் அன்னம்மா முத்துத்தம்பி

திதி:தசமி

அன்பாக அரவணைத்து அறிவுதனை ஊட்டி
பண்பிலே சிறந்து விளங்கிய அம்மாவே!
உம்போலும் உத்தமரை உலகினிலே யாரினிமேல்
எப்போது காண்போம் எம்மினிய தாயாரே!

சாந்தி!

95, நாயன்மார் வீதி,
நாயன்மார்கட்டு. (80536)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானில் உள்ள அமெ., பிரிட்டன் படைகளுக்கு ஆயுதம் ஏற்றிச் சென்ற 96 வாகனங்கள் தீக்கிரை

## பாக். எல்லையில் நேற்றுமாலை தீவிரவாதிகள் அதிரடித் தாக்குதல்



தீக்கிரையாக்கப்பட்ட வாகனங்கங்களில் ஒருபகுதியைப் படத்தில் காணலாம்.

பெஸாவர், டிசெ. 08

ஆப்கானிஸ்தானிலுள்ள மேற்குலகப் படையினருக்கு இராணுவத் தளபாடங்கள் உட்பட விநியோகப் பொருள்களை ஏற்றிச் சென்ற நூற்றுக்கு மேற்பட்ட லொறிகள் மீது இஸ்லாமியத் தீவிரவாதிகள் பாரிய தாக்குதல் ஒன்றை நேற்று மேற்கொண்டு நூறுக்கும் மேற்பட்ட வாகனங்களைத் தீக்கிரையாக்கியுள்ளனர்.

பாகிஸ்தானின் பெஸாவர் நகருக்கு அருகில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. 250க்கும் மேற்ப்பட்ட தீவிரவாதிகள் இப் பாரிய தாக்குலில் பங்கேற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தீக்கிரையாக்கப்பட்ட லொறிகள் சிலவற்றில் இராணுவ டாங்கிகள் மற்றும் கனரக ஆயுதங்கள் இருந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சமீப காலத்தில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் மேற்கொண்ட மிகப்பெரிய தாக்குதல் இது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

250க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் துப்பாக்கிகளையும் ரொக்கட்டுக்களையும் பயன்படுத்தி திடீர் தாக்குதலை மேற்கொண்டனர் என்று பொலிஸார் தெரித்தனர். இதன்போது 96 ட்ரக்குகளும், 6 கென்ரெயினர்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

''அல்லாஹு அக்பர் அமெரிக்கா ஒழிக!'' எனக் கோஷம் இட்டவாறு அவர்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபானுக்கு எதிராக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அமெரிக்கா, பிரிட்டன் உட்பட மேற்குலகப் படையினருக்கான விநியோகங்கள் இடம்பெறும் முக்கிய பாதையிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இப்பாதையூடாக நாளாந்தம் 350இற்கும் மேற்பட்ட ட்ரக்குகள் பயணிப்பது வழமை. எனினும் சமீப காலங்களில் இப்பகுதியில் பல தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தத் தாக்குதலின்போது குறித்த வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்த அதிகாரிகள், பணியாளர்கள் பலரை தீவிரவாதிகள், பணயக்கைதிகளாகப் பிடித்துச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தப் பாதையிலேயே சில வாரங்களுக்கு முன்னர் அமெரிக்க ராஜதந்திரி ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகப் பெரிய குரு சிலை



தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்கு குரு பகவான் நேற்றுமுன்தினம் இடம் பெயர்ந்தார். இதையொட்டி புதுவை அருகே மொரட்டாண்டியிலுள்ள 12 அடி உயர குரு பகவானுக்கு 1008 லிற்றர் பால் அபிஷேகம் செய்யப்பட்ட போது எடுத்த படம். இது உலகிலேயே உள்ள குருபகவானின் விக்கிரகங்களில் மிகப்பெரியதாகும்.

# ஏதென்ஸில் கலவரம்!

ஏதென்ஸ், டிச. 08

கிரேக்கத்தின் தலைநகரான ஏதன்ஸில், இளைஞரொருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டமையை அடுத்து, அங்கு பல நகரங்களில் கலவரங்கள் மூண்டன. தலைநகரிலுள்ள எக்ஸ் ஆர்ச்சியா மாவட்டத்தில் இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இதையடுத்து தலைநகரில் கலவரங்கள் தலையெடுத்தன. பின்னர் கிரேக்கத்தின் இரண்டாவது பெரிய நகரான திஸாலொனிக்கி, வட நகரங்களான கொமொடினி, லொனினா, கிரிட்டி ஆகிய நகரங்களுக்கும் கலவரங்கள் பரவின.

இத்துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக இரு பொலிஸ் அதிகாரிகள் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைநகரம் ஏதென்ஸில் பொலிஸாருக்கும் இடதுசாரி குழுக்களுக்குமிடையே அடிக்கடி மோதல்கள் இடம்பெறுவதுண்டு.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக ஆழ்ந்த கவலை தெரிவித்து, உள்துறை அமைச்சர் புரோகோபிஸ் பெங்கோபோலஸ் அறிக்கையொன்றை விடுத்துள்ளார். ''இச்சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பொலிஸார் கடமையிலிருந்து தவறியவர்களாகக் காணப்பட்டால், அவர்களுக்குத் தக்க தண்டனை வழங்கப்படும்'' என்றும் அவர் அதில் உறுதியளித்துள்ளார்.

ஏதென்ஸில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கானோரைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர். இளைஞர்கள் கல்லெறிவதில் ஈடுபட்டார்கள். சில மணித்தியாலய அமைதிக்குப் பின்னர் மீண்டும் ஆர்ப்பாட்டங்கள் தலைநகரில் பரவலாகத் தலைதூக்கின.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏதென்ஸ் நகர மத்தியப் பகுதிவரை பேரணி நடத்தினார்கள். மற்றும் பலர் ஏதென்ஸிலுள்ள தேசிய தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்துக்கு வெளியே பொலிஸாருடன் மோதினர் என ஏ.பி.செய்தி நிறுவனம் தெரிவித்தது.

# பயங்கரவாதத்துக்கு உதவும் நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தானைச் சேர்ப்பது குறித்து அமெ. ஆராய்வு

## ஒபாமாவின் புதிய நிர்வாகமே முடிவு எடுக்குமாம்

வாஷிங்டன், டிச. 08

பயங்கரவாதத்துக்கு உதவும் நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தானை சேர்ப்பது குறித்து அமெரிக்கா மீண்டும் ஆராயத் தொடங்கியுள்ளது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நிர்வாகம் இது குறித்து முடிவெடுக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போரிற்கு பாகிஸ்தான் செய்த பங்களிப்பு மற்றும் அந்த நாட்டின் புலனாய்வு அமைப்பான ஐ.எஸ்.ஐ. குறித்து அமெரிக்காவின் புலனாய்வு அமைப்புகள் மீளாய்வு செய்து வருகின்றன.

அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தான் இராணுவத்தின் பங்களிப்பு குறித்த நடவடிக்கைளை வெள்ளை மாளிகை பல மாதத்துக்கு முன்னரே இழந்து விட்டது. இதன் தொடர்ச்சியாகவே முன்னாள் ஜனாதிபதி பேவெஸ் முஷாராபிற்காக ஆதரவை வெள்ளைமாளிகை கைவிட்டது.

அமெரிக்காவின் துணை ஜனாதிபதி டிக் செனியின் வேண்டுகோளின் பேரிலேயே முஷாராபிற்கான ஆதரவு கைவிடப்பட்டது.

மும்பாய் தாக்குதலிற்கு பின்னர் புஷ் நிர்வாகம் பாகிஸ்தான் இராணுவம் மற்றும் அதன் புலனாய்வு அமைப்பான ஐ.எஸ்.ஐ. ஆகியன இஸ்லாமிய தீவிரவாதிகளுடன் நெருக்கமான தொடர்பு வைத்துள்ளதாக உறுதியாக நம்பத் தொடங்கியுள்ளது.

இதனை தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிராக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அமெரிக்கா ஆராயத் தொடங்கியுள்ளது. இதில் அந்த நாட்டை பயங்கரவாதத்துக்கு உதவும் நாடுகளின் பட்டியலில் சேர்ப்பதும் முக்கியமானதாகவுள்ளது.

எனினும், புஷ் நிர்வாகத்தின் ஆட்சிக் காலம் முடிவடைவதற்கு சில வாரங்களே உள்ளதாக அது தீர்க்கமான முடிவையெடுக்க முடியாத நிலையிலுள்ளது.

இதன் காரணமாக இது குறித்து பராக் ஒபாமாவின் புதிய நிர்வாகம் தீர்மானிக்கலாம் என்று தெரிய வருகின்றது.

1992 இல் ஏற்கனவே அமெரிக்கா இது குறித்து தீவிரமாக சிந்திருத்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹிலாரியின் இடத்துக்கு செனட்டராக கெனடியின் மகள் கரோலின் நியமனம்?

வாஷிங்டன், டிச. 08

அமெரிக்கா நியூயோர்க் செனட்டராக ஹிலாரி கிளிண்டனுக்குப் பதிலாக முன்னாள் ஜனாதிபதி ஜோன் எவ். கெனடியின் புதல்வி கரோலின் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்காவில் புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒபாமா, கட்சிக்குள் தன்னை எதிர்த்து போட்டியிட்ட செனட்டர் ஹிலாரி கிளிண்டனை வெளிவிவகார அமைச்சராக நியமித்துள்ளார். அதனால், செனட்டர் பதவி காலியாகியுள்ளது. அந்தப் பதவி இன்னும் 2 ஆண்டுகள் நீடிக்கக்கூடியது.

காலியான பதவிக்கு தகுதியான ஒரு ஜனநாயகக் கட்சி பிரமுகரை நியமிக்கும் அதிகாரம் ஆளுநருக்கு உண்டு.

ஒபாமாவின் வெற்றிக்காக பாடுபட்டவர்களில் கரோலினும் ஒருவர். அவர் பிரசாரக் கூட்டங்களில் பங்கு கொண்டு அவருக்காக வாக்கு கேட்டார். ஒபாமாவின் நிர்வாக அதிகாரிகளுடன் நெருக்கமான தொடர்பு வைத்து இருக்கிறார். அவருக்கு கென்னடியின் மகள் என்ற அளவில் புகழ் இருந்தாலும், அவர் அளவுக்கு அதிகமாகக் கூச்ச சுபாவம் கொண்டவர். இதனால், யாருடனும் எளிதில் பழகிவிடமாட்டார். அவரே இப்போது ஹிலாரியின் இடத்துக்கு செனட்டராக நியமிக்கப்படவுள்ளார்.

# இந்திய வெளிவிவகார அமைச்சரின் பெயரில் பாக். ஜனாதிபதிக்கு தொலைபேசியில் மிரட்டல்!

இஸ்லாமாபாத், டிச. 08

மும்பையில் பயங்கரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்திக்கொண்டிருந்த நேரத்தில் நவம்பர் மாதம் 28 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரியைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட மர்ம நபர் ஒருவர் கடுமையான வார்த்தைகளால் திட்டியிருக்கிறார். பயங்கரவாதிகளை ஒடுக்காவிட்டால் தாக்குதல் நடத்துவோம் என்று எச்சரித்திருக்கிறார்.

''இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி பேசுகிறேன். அஷிப் அலி சர்தாரி இருக்கிறாரா?'' என்று ஒருவர் கேட்டிருக்கிறார். உடனே ஜனாதிபதியின் அலுவலக உதவியாளர்கள் அந்த அழைப்பை சர்தாரியிடம் கொடுத்துள்ளனர்.

அவரோ அஷிப் அலி சர்தாரியைக் கடுமையாக வசை பாடியிருக்கிறார். பயங்கரவாதிகளின் தாக்குதலைத் தடுத்து நிறுத்தாவிட்டால் இராணுவத்தின் மூலம் இந்தியா பதிலடி கொடுக்க நேரிடும் என்று எச்சரித்திருக்கிறார். நவம்பர் மாதம் 28 ஆம் திகதி அந்தத் தொலைபேசி உரையாடல் நடந்திருக்கிறது.

நவம்பர் மாதம் 29 ஆம் திகதி பாகிஸ்தான் நாளிதழ்கள் சிலவற்றில், வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி மிரட்டினார் என செய்திகள் வந்தன. யாருடன் அவர் பேசினார், யாரை மிரட்டினார் என்ற விவரம் எதுவும் அதில் இல்லை. தங்களுடைய செய்திக்கு ஆதாரம் என்ன என்பதையும் பத்திரிகைகளும் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றும் வெளியிடவில்லை.

இஸ்லாமாபாத்திலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கு இது ஒரே புதிராக இருந்தது. அவர்கள் உடனே டில்லியுடன் தொடர்பு கொண்டு ''சர்தாரியை மிரட்டினீர்களா?'' என்று கேட்டனர். ''இல்லையே'' என்று டில்லியிலிருந்து பதில் வந்தது. உடனே பாகிஸ்தான் வெளியுறவுத்துறையுடன் அவர்கள் பேசினர். ''செய்தித்தாள்களில் வந்துள்ள மிரட்டல் செய்திக்கு மூலம் எது?'' என்று கேட்டனர்.

அதன் பின்னரே அப்படிப் பேசியவர் பிரணாப் முகர்ஜி அல்ல, வேறுயாரோ என்று தெரியவந்தது. இந்தத் தொலைபேசி தகவலைக் கேட்டு நீங்கள் குழப்பம் அடையவேண்டாம். இந்திய அரசு பேசுவதாக இருந்தால் உரிய முறையில், முன் அறிவிப்புகளுக்குப் பின்னரே பேசும் என்று வழக்கமான நடைமுறையை இந்தியத் தூதரக அதிகாரிகள் பாகிஸ்தான் அதிகாரிகளுக்குத் தெரிவித்தனர்.

இரு நாடுகளின் உயர் தலைவர்கள் தொலைபேசியில் பேசுவதாக இருந்தால், முதலில் பேச விரும்பும் நாட்டைச் சேர்ந்த உயர் அதிகாரி, எதிர்முனையில் தன்னுடைய அந்தஸ்தில் பதவி வகிக்கும் அதிகாரியை அழைத்து, தங்கள் நாட்டு அமைச்சர் அல்லது மூத்த நிர்வாகி பேச விரும்புகிறார் எனக் கூறுவார்.

அதை அவர் தன்னுடைய நாட்டு அமைச்சர் அல்லது தலைவருக்குத் தெரிவித்து அவருடைய ஒப்புதல் பெற்ற பிறகே, இந்த நேரத்தில் பேசலாம் என்று அனுமதி வாங்கித் தருவார். இதனிடையே பேச விரும்புகிறவர் யார், அதைத் தெரிவித்தவர் யார் என்பதெல்லாம் சரி பார்க்கப்பட்ட பின்னரே ஒப்புதல் தரப்படும்.

இந்த நிலையில், ''டில்லியிலிருந்து முகர்ஜி பேசுகிறேன்'' என்று ஒருவர் கூறியவுடனேயே, அவர் முகர்ஜிதானா என்றெல்லாம் விசாரிக்காமல் எப்படி சர்தாரியிடம் தொலைபேசியைக் கொடுத்தார்கள் என்று இந்திய அதிகாரிகள் வியக்கின்றனர்.

### இஸ்லாமாபாத்தில் பரபரப்பு

மும்பையில் தாக்குதல் நடத்துபவர்கள் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் என்ற தகவல் பாகிஸ்தான் செய்தித்தாள்களிலும் தொலைக்காட்சிகளிலும் தொடர்ந்து கூறப்பட்டதால், முகர்ஜியிடமிருந்து அழைப்பு என்று சொன்னவுடனேயே நிலைமை கருதி ஜனாதிபதியை தொலைபேசியில் பேச அனுமதித்துவிட்டார் மூத்த அதிகாரி என்று தெரியவருகிறது.

இதற்கிடையே அந்த அழைப்பு வந்தவுடனேயே இஸ்லாமாபாத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இந்தியா போருக்குத் தயாராகிவிட்டது என்ற தகவல் எல்லோருக்கும் தெரிவிக்கப்பட்டது. லாகூரிலிருந்து பிரதமர் யூசுப் கிலானியை உடனே இஸ்லாமாபாத்துக்கு திரும்புமாறு தொலைபேசி மூலம் அழைப்பு விடுக்கப்பட்டது.

டில்லியில் அப்போது இருந்த பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷியை அழைத்து வர பாகிஸ்தான் விமானப்படைத் தலைமை தளபதியின் போர் விமானம் அனுப்பப்பட்டது.

அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்களுடன் பாகிஸ்தான் தொடர்பு கொண்டு படை எடுப்போம் என்று இந்தியா மிரட்டுகிறது என தெரிவித்துள்ளது.

சர்தாரி இப்படி மிரட்டப்பட்டார் என்றே இந்திய அரசுக்கு முதலில் தெரியாது. சர்தாரியே அதை இந்தியாவிலுள்ள தன்னுடைய நண்பருக்குத் தெரிவித்தார். அதை அவர் இந்திய அரசில் உயர் பதவி வகிப்பவர் ஒருவரிடம் தெரிவித்தார். அதன் பின்னரே இது பற்றிய விசாரணை தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தத்தை அமுல்படுத்திவிட்டே பிரணாப் இந்தியா திரும்ப வேண்டும்!

## டாக்டர் ராமதாஸ் வலியுறுத்து



திண்டிவனம், டிச.8

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட்டுவிட்டது என்ற அறிவிப்போடே கொழும்புக்குச் செல்லவுள்ள பிரணாப் முகர்ஜி அங்கிருந்து இந்தியா திரும்ப வேண்டும். அதைவிடுத்து ஏதோ பேசினோம், வலியுறுத்தியிருக்கிறோம் என்ற வழக்கமான பாணியில் பிரணாப் கொழும்பு சென்று திரும்பக்கூடாது. இதனை தமிழகத்தின் சார்பில் முதல்வர் கருணாநிதி மீண்டும் வலியுறுத்திக் கூறவேண்டும்.

- இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், இத்தனை இன்னல்களுக்குப் பிறகும் ஈழத் தமிழர்கள் தங்களது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறார்கள். ஊரை எரித்தாலும் - உயிர்களைப் பறித்தாலும் யாருக்கும் தலைவணங்கி வாழமாட்டோம் என்ற அவர்களின் மன உறுதியை - விருப்பத்தை இந்தியா மதிக்க வேண்டும், நிறைவேற்றி வைக்க வேண்டும் - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திண்டிவனம் அருகேயுள்ள தைலாபுரம் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் அதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கை அரசு போரை உடனடியாக நிறுத்த வேண்டும். அமைதிப்பேச்சை உடனே தொடங்க வேண்டும். அதற்கு இந்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த கருத்துடையதாக இருக்கின்றன. இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்பதைப் பேச்சளவில் வலியுறுத்தி கொண்டிருக்காமல் செயலில் காட்ட வேண்டும்.

பிரணாப் முகர்ஜி இன்னும் ஓரிரு தினங்களில் கொழும்புக்குச் செல்ல வேண்டும். போர் நிறுத்தம் செய்யப்பட்டுவிட்டது என்ற அறிவிப்போடு அவர் இந்தியா திரும்ப வேண்டும். அதுதான் 7 கோடி தமிழர்களுக்கும் திருப்தி அளிக்கக்கூடியதாக இருக்கும்.

பேசினோம், வலியுறுத்தியிருக்கிறோம் என்ற வழக்கமான பாணியில் பிரணாப் முகர்ஜி கொழும்பு சென்று திரும்பக்கூடாது. இதனை தமிழகத்தின் சார்பில் முதல்வர் கருணாநிதி மீண்டும் வலியுறுத்திக் கூறவேண்டும். அப்போதுதான் அனைத்துக் கட்சித் தலைவர்கள் டில்லி சென்றதன் நோக்கம் நிறைவேறும்.

# சோழர்கள் கால கருங்கல் மண்டபம் கண்டுபிடிப்பு!



விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே எலவனாசூர்கோட்டையில் பெருமாள் கோயில் கட்டுவதற்காக அத்திவாரம் தோண்டியபோது, பூமிக்கடியில் கருங்கல்லால் ஆன பீடம் கண்டுபிடிக்கப்பட்டது. அதில் அமர்ந்து அர்ச்சகர்கள் சிறப்பு பூஜை செய்கின்றனர். கல்வெட்டில் உள்ள ஆதாரங்கள் மூலம் இந்தப் பீடம், சோழ மன்னர்களால் கட்டப்பட்டிருக்கலாம் என திருப்பணிக்குழுவினர் தெரிவித்தனர். பின்னணியில் பழமையான சிவன் கோயில் கோபுரம் தெரிகிறது.

# செங்கல்பட்டு முகாமில் இலங்கை அகதிகள் மரத்தில் ஏறி உண்ணாவிரதப் போராட்டம்!

சென்னை, டிச.8

செங்கல்பட்டு முகாமிலுள்ள இலங்கை அகதிகள் தங்கள் மீதான வழக்குகளை விரைவில் முடிக்க வேண்டும் என்று வலியுறுத்தி மரத்தின் மேல் ஏறி நின்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

செங்கல்பட்டு பழைய பஸ் நிலையம் அருகிலுள்ள இலங்கை அகதிகள் முகாமில் 83 பேர் உள்ளனர். இவர்களில், 9 பேர் கடந்த 3ஆம் திகதி முதல் தங்கள் மீதான வழக்குகளை விரைவில் முடிக்கவேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

இந்த நிலையில், கோரிக்கையை நிறைவேற்றாததைக் கண்டித்து 4ஆவது நாளான நேற்றுமுன்தினம் காலை 7 அகதிகள் அங்குள்ள மரத்தில் ஏறி தற்கொலை செய்யப் போகிறோம் என மிரட்டினர்.

இதையடுத்து, எஸ்.பி. பெரியய்யா, செங்கல்பட்டு கலெக்டர் பழனி ஆகியோர் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு அகதிகள் முகாமுக்கு வந்தனர். கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்கள் உறுதி கூறினர். அதன்பின், மரத்திலிருந்து 7 அகதிகளும் இறங்கினர்.



அப்போது, தாங்கள் தங்கியுள்ள கட்டடம் மழையில் ஒழுகுவதாகவும், அதைச் சீர் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரினர். இது குறித்து பொதுப் பணித்துறை அதிகாரிகளிடம் தெரிவிக்கப்படும். உங்கள் மீதான வழக்குகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று எஸ்.பி. பெரியய்யா, கலெக்டர் பழனி ஆகியோர் உறுதியளித்தனர்.

பின்னர், 9 அகதிகளுக்கும் அதிகாரிகள் ஜூஸ் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தனர்.

# இராமேஸ்வரம் கடற்பகுதியில் மேலும் ஒரு இலங்கைப் படகு

## பொலிஸார் விடிய விடியச் சோதனை

இராமேஸ்வரம், டிச.8

இராமேஸ்வரம் அருகே அரிச்சல்முனைப் பகுதியில் மேலும் குண்டு துளைக்கப்பட்ட இலங்கைப் படகு ஒன்று நேற்றுமுன்தினம் கரை ஒதுங்கியது.

இதையடுத்து, இராமேஸ்வரம், முகுந்தராயர் சத்திரம், தனுஷ்கோடி, அரிச்சல்முனை பகுதிகளில் பொலிஸார் விடிய, விடிய சோதனை நடத்தினர்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையே போர் தீவிரமடைந்துள்ளது. இந்த நிலையில், கடந்த 15 நாள்களாக இராமேஸ்வரம், தனுஷ்கோடி கடல் பகுதியில் படகுகள் கரை ஒதுங்கிக் கொண்டிருக்கின்றன.

கடந்த 21ஆம் திகதி, தனுஷ்கோடி கம்பிப்பாடு பகுதியில் கடல் மணலில் புதைக்கப்பட்ட இயந்திரம் இல்லாத படகு கைப்பற்றப்பட்டது. டிசம்பர் முதலாம் திகதி அரிச்சல்முனையில் குண்டு துளைக்கப்பட்டு, ரத்தக்கறை படிந்த துணிகளுடன், கவிழ்ந்த நிலையில் 2 பிளாஸ்டிக் படகுகளும், டிசம்பர் 4இல் விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் ஒரு படகும் கைப்பற்றப்பட்டன.

கடந்த வெள்ளியன்று, முகுந்தராயர் சத்திரம், முதலாவது திட்டு, 5ஆவது திட்டு பகுதிகளில் அடுத்தடுத்து 3 பிளாஸ்டிக் படகுகள் கரை ஒதுங்கின. இவற்றில் இயந்திரங்கள் இல்லை. இந்த நிலையில், நேற்றுமுன்தினம் அரிச்சல்முனையில் மேலும் ஒரு படகு கரை ஒதுங்கியது.

இந்தப் படகுகள் குண்டு துளைக்கப்பட்டு இருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து, எஸ்.பி செந்தில்வேலன் தலைமையில் பொலிஸார் இராமேஸ்வரம், முகுந்தராயர் சத்திரம், தனுஷ்கோடி, அரிச்சல்முனை பகுதிகளில் விடிய, விடிய சோதனை நடத்தினர்.

தமிழகக் கடல்பகுதிக்கு மத்திய உளவுத்துறை ஏற்கனவே எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் இலங்கைப் படகுகள் அடுத்தடுத்து கரை ஒதுங்குகின்றமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஈழத் தமிழருக்கு நிவாரணப் பொருள்கள் டில்லிப் பயணத்துக்குக் கிடைத்த வெற்றி

## கி.வீரமணி பேட்டி

சென்னை, டிச.8

இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றமை, கருணாநிதி தலைமையில் அனைத்துக் கட்சிக் குழுவின் டில்லிப் பயணத்துக்கு கிடைத்த வெற்றி - என்று திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு-

முதல்வர் கருணாநிதி தலைமையில் அனைத்துக் கட்சிக் குழு டில்லிக்குச் சென்றது ஈழ தமிழர் வாழ்வுரிமையில் ஒரு சிறந்த திருப்பமாக அமைந்துள்ளது. முதல்வரின் முயற்சி நல்ல பலனை அளித்துள்ளது. நிவாரண உதவிகள் உரியவர்களுக்கு சேர வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேறியுள்ளதும் ஆறுதலாக இருக்கிறது.

இறுதி லட்சியம் போர் நிறுத்தம் என்பதுதான். இதற்காக பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பவும் பிரதமர் ஒப்புக் கொண்டமை இந்தப் பயணத்துக்குக் கிடைத்த வெற்றியாகும். இதனை சிலர் விமர்சிப்பது அரசியல் மாற்றத்தால் வந்த விளைவு - என்றார்.

# வரும் தேர்தலில் விஜயகாந்துக்கு எதிராக பிரசாரம் செய்வேன் என்கின்றார் வடிவேலு

சென்னை, டிச.8

நாடாளுமன்றத் தேர்தலில் விஜயகாந்துக்கு எதிராகப் பிரசாரம் செய்வேன் - என்று நடிகர் வடிவேலு தெரிவித்தார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு-

நான் கட்சி தொடங்கவில்லை. படத்தில் யாரையும் விமர்சிக்கவில்லை. படத்தில் நடித்துவிட்டு சந்து பொந்துகளில் புகுந்து வீட்டுக்கு சென்று கொண்டிருந்த என்னை, இப்போது வீதிக்கு இழுத்துவிட்டார்கள். யார் வீட்டிலும் நான் கல் எறியவில்லை. ஆனால் என் வீட்டின் மீது விஜயகாந்த் அனுப்பிய ஆள்கள் கல் எறிந்து தாக்குதல் நடத்தினர். இன்னும் கூட அந்த வலி போகவில்லை.



சில நாள்களாகவே தொலைபேசியில் சிலர், 'உன்னை ஒழித்துவிடுவேன்' என்றும், கெட்ட வார்த்தைகளில் திட்டியும் மிரட்டுகிறார்கள். அதற்குப் பயப்படமாட்டேன். ஏற்கனவே சொன்னமைபோல் சட்டசபைத் தேர்தலில் விஜயகாந்த் எந்த தொகுதியில் போட்டியிட்டாலும் அவரை எதிர்த்து சுயேச்சையாக நிற்பேன். அதில் மாற்றம் கிடையாது. நாடாளுமன்றத் தேர்தலில் விஜயகாந்துக்கு எதிராக பிரசாரம் செய்வேன் - என்றார்.

## இந்தியச் செய்திகள்

# சேலம் அருகே மனைவி, 3 குழந்தைகளை கழுத்தறுத்துக் கொன்ற கொடூரக் கணவன்

சேலம், டிச. 8

குடும்பத் தகராறில் மனைவி மற்றும் 3 குழந்தைகளைக் கழுத்தை அறுத்துக் கொலை செய்த கணவன், தானும் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

சேலம் பிரபாத்தை அருகேயுள்ள சுண்ணாம்புக்கார தெருவைச் சேர்ந்தவர் அத்தியப்பன். கசாப்பு கடை நடத்தி வந்தார். இவருக்கு மயிலு என்ற மனைவியும், தீபா (வயது -11), திவ்யா (வயது -6), சர்மிளா (வயது - 3) என்ற பெண் குழந்தைகளும் இருந்தனர். இவர்கள், சேலம் மாவட்டம் வாழப்பாடி அருகேயுள்ள கருங்கல்பட்டியில் வசித்து வந்தனர். அத்தியப்பன், தினமும் குடித்துவிட்டு வந்து மனைவியை அடித்து உதைத்துள்ளார். வீட்டுச் செலவுக்கும் பணம் தரமாட்டார். இதனால் கணவன், மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் காலை கருங்கல்பட்டியைச் சேர்ந்த மூர்த்தி என்பவர் கிழங்கு பிடுங்கும் வேலைக்கு அழைத்துச் செல்வதற்காக அத்தியப்பன் வீட்டுக்கு வந்துள்ளார்.

நீண்ட நேரமாக தட்டியும் கதவை திறக்காததால் ஜன்னல் வழியாக மூர்த்தி எட்டிப் பார்த்தார். அத்தியப்பன் தூக்கில் பிணமாக தொங்குவதைக் கண்டு அதிர்ச்சியடைந்த மூர்த்தி, அருகில் உள்ள அத்தியப்பனின் மாமியாருக்கு தகவல் தெரிவித்தார். அப்பகுதி மக்களும் ஓடி வந்து கதவை உடைத்து உள்ளே சென்றனர்.

அங்கு மயிலு, தீபா, திவ்யா, சர்மிளா ஆகியோர் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் ரத்த வெள்ளத்தில் பிணமாகக் கிடந்தனர். பிஞ்சுக் குழந்தைகளின் உடல்களைப் பார்த்து உறவினர்கள், ஊர்மக்கள் கதறி அழுதனர்.

குடும்பத் தகராறில் மனைவி மற்றும் குழந்தைகளை கழுத்தை [illegible] அத்தியப்பன் தூக்கில் [illegible] விசாரணையில் தெரியவந்தது.

# மும்பையைத் தாக்கிய தீவிரவாதிகளுக்கு 'சிம்' கார்ட் விற்ற இரு இந்தியர் கைது

கொல்கத்தா, டிச.8

மும்பையில் நவம்பர் 26ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி "சிம்' கார்டுகளை விற்பனை செய்த 2 இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் காஷ்மீர் மாநிலத்தையும் மற்றவர் மேற்கு வங்கத்தையும் சேர்ந்தவர்கள். பயங்கரவாதிகளுடன் இவர்களுக்குள்ள தொடர்பு குறித்து அறிய மும்பை பயங்கரவாத எதிர்ப்புப்படை உயர் பொலிஸ் அதிகாரிகள் விரைந்துள்ளனர்.

தாஜ், டிரைடண்ட், ஒபராய் ஆகிய ஹோட்டல்களிலும் யூதர்களின் குடியிருப்புகளிலும் புகுந்து அட்டகாசம் செய்த பயங்கரவாதிகள் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசிகளின் [illegible] கார்டுகளை ஆய்வு செய்ததில் [illegible] கொல்கத்தாவில் விற்பனையானவை என்று தெரிந்தது. அவற்றை விற்றது யார் என்று தீவிரமாக விசாரணை செய்ததில் காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் ரெஹன்பாரி என்ற பகுதியைச் சேர்ந்த முக்தார் அகமது ஷேக் (வயது - 35), தௌசீப் ரெஹ்மான் (வயது - 26) ஆகியோர் பிடிபட்டனர்.

இந்த இருவரும் கொல்கத்தா நகரின் வெவ்வேறு கையடக்கத் தொலைபேசிக் கடைகளிலிருந்து ஒக்டோபர் 9ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை 22 சிம் கார்டுகளை வாங்கியுள்ளனர். கார்டுகள் வாங்க போலியான முகவரிகளையும் இதர ஆவணங்களையும் பயன்படுத்தியுள்ளனர். தௌசீப்பின் இறந்த உறவினரான அஷ்ரப் நுமானின் வாக்காளர் அடையாள அட்டையைக் காட்டி 13 சிம் கார்டுகளை வாங்கியுள்ளனர். அந்த 13இல் ஒன்றுதான் மும்பை பயங்கரவாதிகளால் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வேறு சில சிம் கார்டுகளை சிறிதளவு பயன்படுத்திவிட்டு எவர் மூலமோ கொடுத்தனுப்பியிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவினைக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் 7 வருடங்களுக்கு குடியியல் தகுதியீனம் விதிக்கப்படும்

கொழும்பு, டிசெ. 08

இலங்கைக்குள் தனி அரசு ஒன்றை நிறுவுவதற்கான முயற்சிக்கு ஆதரவு அளித்தார்கள் என்று தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு எம்.பிக்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அரசும், குற்றப் புலனாய்வுப் பிரிவும் தயாராகி வருகையில் -

இத்தகைய குற்றச்சாட்டில் அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படின் -

* அவர்கள் ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு குடியியல் உரிமைகளை இழப்பர்.

* அவர்களினதும், அவர்களது குடும்பத்தினரதும் பாவனைக்கு அவசியமானவை, தவிர்ந்த ஏனைய அசைவற்ற, அசைவுள்ள ஆதனங்களை அவர்கள் இழப்பர்.

* நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மற்றும் பகிரங்க சேவை அலுவலர் பதவி போன்றவற்றை இழப்பர்.

- இவ்வாறு அரசமைப்பின் 157 (அ) (டி) பிரிவு தெரிவிக்கின்றது.

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தின் கீழ் இருந்த விடயங்கள் அரசமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

மேற்படி பிரிவினைக்காக செயற்பட்ட விடயம் சம்பந்தமான பிரச்சினை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்டவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் இத்தகைய தண்டனைகளுக்கு அவர் உட்படுத்தப்படுவார் என அரசமைப்புக் கூறுகின்றது.

அதேசமயம் -

இத்தகைய குற்றச்சாட்டுகளின் பேரில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டு அவருக்கு மேற்படி தண்டனைகள் வழங்கப்பட்டால் -

அந்தத் தீர்ப்புக்கு எதிராக அவர் மேன்முறையீடு செய்தாலும் கூட, அந்த மேன்முறையீடு காரணமாக அந்தத் தண்டனைகள் செயற்படுவது இடைநிறுத்தி வைக்கப்படமாட்டாது என்றும் அரசமைப்பு ஏற்பாடுகள் தெரிவித்துள்ளன.

'இலங்கையின் ஆள்புலத்துக்குள் தனி அரசு ஒன்றை நிறுவுவதற்காக எவரும் இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவு அளித்தல், ஆக்கமளித்தல், ஊக்கமளித்தல், ஊக்குவித்தல், நிதியுதவுதல், பரிந்துரைத்தல் ஆகாது' - என அரசமைப்புக் கூறுகின்றது.

இதை மீறிய குற்றத்துக்காக மேன்முறையீட்டு நீதிமன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டு, குடியுரிமை இழக்கும் தகுதியீனம் ஒருவருக்குத் தண்டனையாக விதிக்கப்பட்டால் - ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு அந்த நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் அத்தகைய குடியியல் தகுதியீனக் காலத்தில் அவர் -

* கடவுச் சீட்டு ஒன்றைப் பெறுவதற்கான உரிமை -

* பகிரங்கப் பரீட்சை எதற்கும் தோற்றுவதற்கான உரிமை -

* அசைவற்ற ஆதனம் எதையும் தமது சொந்தத்தில் வைத்திருப்பதற்கான உரிமை -

* சட்டத்தின்கீழ் உரிமம் (லைசென்ஸ்), பதிவு அல்லது அதிகாரமளிப்புத் தேவைப்படுகின்ற ஏதேனும் வியாபாரம் அல்லது உயர் தொழிலில் ஈடுபடுவதற்கான உரிமை-

ஆகியவற்றை இழப்பார் என்றும் அரசமைப்புத் தெரிவித்துள்ளது. (உ)



ஈழத் தமிழர்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் தொடர்பாக சுவிஸ்லாந்தின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரியையும், சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் தமிழ்க் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்த மூர்த்தி சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். அப்போது எடுக்கப்படங்கள் இவை

## யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுமுதல் மீண்டும் 'பாஸ்' நடைமுறை அமுலில்

யாழ்ப்பாணம், டிசெ.08

யாழ்.போதனா வைத்தியசாலையில் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு மீண்டும் அனுமதிச்சீட்டு (''பாஸ்'') நடைமுறை நேற்று நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

நேற்று நண்பகல் 12மணி தொடக்கம் இந்த அனுமதிச்சீட்டு முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஒரு நோயாளரைப் பார்வையிடுவதற்கு இரண்டு ''பாஸ்கள்'' என்ற வகையில் வழங்கப்படுகிறது. அதனைக் கொண்டு செல்லாத எவரும் வைத்தியசாலை விடுதிகளுக்குச் (வார்ட்டுகளுக்கு) செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கை வைத்தியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாகவே இந்த நடைமுறைகளை மீண்டும் அமுல்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(அ-1-203-78)

*மணிக்குரல் சற்குணனின்*
மணிவிளக்குகள் மணிவதனன், ஜெயச்சித்ரா

**மறைந்து 14 ஆண்டுகள் ஞாபகார்த்த**
**உள்ளக விளையாட்டுப் போட்டிகள்**
**கரம் - மேசைப் பந்தாட்டம்**
1)19 வயதுக்கு உட்பட்டவர்கள் (Under 19)
2)19 வயதுக்கு மேற்பட்டவர்கள்(Opens)

இருபிரிவாக போட்டிகள் நடைபெறும்.
ஒற்றையர், இரட்டையர் ஆட்டங்களில் பங்குபற்ற விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் கீழ்க்காணும் முகவரியில் விண்ணப்பப்படிவத்தை பெற்றிடுங்கள்.
வி.எஸ்.சற்குணம், இல.52, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.
விண்ணப்ப முடிவு திகதி 16.12.2008
போட்டிகள் யாவும் 20, 21.12.2008 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.
குறிப்பு: சென்ற ஆண்டு நடைபெற்ற போட்டியின் சான்றிதழ்கள் இப்போட்டிகளின் நிறைவில் வழங்கப்படும்.
-சி.சற்குணமூர்த்தி.

**கலாலயா**
**பயிற்சியகம்**
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

மகளிருக்கான 12 நாள்கள் பயிற்சி

* கூந்தல் அலங்காரங்கள் * FACIALS * மண அலங்காரங்கள் * Fabric Painting
* பூவேலை * கைவேலை * சாறி பிளவ்ஸ்கள், சுரிதார் தைத்தல்
* 25 நாள்கள் Saree Work பயிற்சிகள்.

சனி-ஞாயிறு பிரிவு டிசெம்பர் 9ஆம், 12ஆம் திகதி பொதுவிடுமுறை நாள்களிலும் தொடர்ந்து சனி, ஞாயிறுகளிலும் நடைபெறும்.
கிழமை நாள் பிரிவு இன்று 08.12.2008 ஆரம்பமாகி கிழமை தோறும் இரு நாள்கள் பயிற்சிகளாக நடைபெறும்.

* மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.
மேலும் விவரங்களை தினமும் பி.ப. 2மணிவரை நேரில் அறிந்து [illegible]
[illegible]

## வரவு-செலவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அவரால் வரவு - செலவுத் திட்ட உரை நிகழ்த்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மறுநாள் ஏழாம் திகதி முதல் 14ஆம் திகதிவரை வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடத்தப்பட்டு 14ஆம் திகதி அது மீதான வாக்கெடுப்பு இடம்பெற்றிருந்தது.

17ஆம் திகதி மூன்றாம் கட்ட வாசிப்பு (அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு) மீதான விவாதம் தொடக்கிவைக்கப்பட்டது.

இன்று மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு முழு வரவு - செலவுத் திட்டத்திற்குமான இறுதி வாக்கெடுப்பு பிற்பகல் 5 மணிக்கு நடைபெறும். (சி)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய மூவரையும் நாட்டைவிட்டு வெளியேறக்கூடாது என ஓர் உத்தரவு பிறப்பிக்கும்படியும் அந்த விண்ணப்பத்தில் குற்றப் புலனாய்வுத் துறையினர் கொழும்பு பிரதம நீதிவானைக் கோரியிருந்தனர்.

இந்த மனுவைக் கடந்த வெள்ளியன்று பரிசீலித்த கொழும்பு பிரதம நீதிவான், மேற்படி எம்.பிகள் வெளிநாடு செல்வதைத் தடுக்கும் உத்தரவுகளை வழங்க மறுத்துவிட்டார்.

எனினும் இந்த நான்கு எம்.பிகளையும் எதிர்வரும் 10ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்க அவர் அன்று காலை பணிப்புரை வழங்கினார்.

ஆனாலும், அந்தப் பணிப்புரையை அன்று மாலையே விலக்கிக்கொண்ட அவர், இந்த விடயம் குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று அதன்படி நடவடிக்கை எடுக்குமாறு குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்த நிலையில் -

நான்கு எம்.பிகளில் தற்போது நாட்டுக்குள் தங்கியிருப் போரில் ஒருவரான அரியநேத்திரன் நேற்றுக்காலை இந்தியா செல்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்திற்குச் சென்றார்.

அங்கு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழிமறிக்கப்பட்டவர், விமானநிலையத்தில் பணியில் இருந்த குற்றப் புலனாய்வுப் பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டார்.

அவரையும், ஏனைய இரண்டு எம்.பிக்களையும் (கஜேந்திரன், ஜெயானந்தமூர்த்தி ஆகியோரையும்) நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்க வேண்டாம் என்ற உத்தரவு கடந்த முதலாம் திகதியன்று அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் விமான நிலையத்திற்கு விடுக் கப்பட்டிருப்பதாக அரியநேத்திரன் எம்.பிக்கு அங்கு வைத்துத் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாடு செல்ல அனுமதி மறுக்கப்பட்டதால் அவர் நேற்றுக் காலையே கட்டுநாயக் காவிலிருந்து [illegible]

## பரீட்சை நிலையம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 08

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலய (நிலைய இலக்கம் 6943) பரீட்சை நிலையம், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது என்று யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

## வடமராட்சியில் இரு ஆலயங்களில் வழிபாட்டுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ.08

பருத்தித்துறை, கொட்டடி சித்தி விநாயகர் ஆலயம், கோட்டுவாசல் சண்டிகா பரமேஸ்வரி ஆலயம் ஆகியன வழிபாட்டுக்குத் திறந்துவிடப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு வருடங்களாகப் பாதுகாப்புக் காணங்களுக்காக மூடப்பட்டிருந்த இவ்விரு ஆல யங்களும் படையினரால் பூசைகளுக்காக திறக்கப்பட்டுள்ளன.

ஆலயங்களின் பக்தர்கள் விடுத்த கோரிக்கையில் பேரில் இரு ஆலயங்களும் திறக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (1)

## ஆனைக்கோட்டை மூத்தநயினார் குளத்தில் குளிக்கத் தடை

நவாலி, டிசெ.08

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயக் குளத்தில் குளிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இக்குளத்தில் இளைஞன் ஒருவர் நீந்திக் கொண்டிருக்கும் போது நீரில் மூழ்கி மரணமானார். அதைத் தொடர்ந்து குளிப்பதற்கு தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(203-100)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், டிசெ.08

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக் கற்றல் உபகரனங்களுடன் அரிக்கன் லாம்பு, மண்ணெண்ணெய் ஆகியவை நேற்று வழங்கப்பட்டன.

அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட அரிக்கன்லாம்பு, கணித உபகரணப் பெட்டி, அப்பியாசப் புத்தகங்கள், பேனா, மண்ணெண்ணெய் ஆகியவை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டன என வலயக்கல்வி அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

(202-207)

## கல்விப் பணிப்பாளர்களுக்கு மீண்டும் இடமாற்ற உத்தரவு

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.மாவட்ட கல்வி வலயங்கள் இரண்டின் கல்விப் பணிப்பாளர்களுக்கு வடமாகாணக் கல்வி அமைச்சினால் இடமாற்ற உத்தரவுகள் மீண்டும் வழங்கப்பட்டுள்ளன.

வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமராட்சி கிழக்கு, வடமராட்சி கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வரத்தினம் ஆகியோரே மீண்டும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஏற்கனவே இவர்கள் இருவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்ட போதிலும் வலய பாடசாலைகளின் அதிபர்கள் சங்கம், ஊழியர் சங்கம் என்பன எடுத்துக்கொண்ட முயற்சியால் இந்த இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

மீண்டும் இவர்களது இடமாற்ற உத்தரவை ரத்துச் செய்ய வேண்டும் என்ற நடவடிக்கையில் அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

(1-86)

## மரண அறிவித்தல்

*சுப்பையா தட்சணாமூர்த்தி*

(ஓய்வுபெற்ற ஆசிரியர், இணுவில் மத்தியகல்லூரி)

சுப்பையா தட்சணாமூர்த்தி(ஓய்வு பெற்ற ஆசிரியர், இணுவில் மத்தியகல்லூரி) நேற்று (07.12.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா- செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை-சிதம்பரம் தம்பதியரின் மருமகனும் இராஜேஸ்வரியின் (தேவி) அன்புக் கணவரும் சுந்தரவடிவேல், சண்முகவடிவேல், சுகந்தினி, ஆனந்தவடிவேல், அருள்வடிவேல், அன்புவடிவேல், தங்கவடிவேல் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜானகி, கவிதா, மயூரதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் கோயிலடி,*
*இணுவில் கிழக்கு.*

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் நேற்று சோதனை நடவடிக்கை: நூறுக்கும் மேற்பட்ட தமிழர்களின் விவரங்கள் பதிவு

கொழும்பு, டிசெ.8

கொழும்பு கோட்டை, புறக்கோட்டை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை உட்பட பல இடங்களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் மாலை வரை பொலிஸாரினால் கடுமையான சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சோதனை நடவடிக்கையில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்களும் மற்றும் முகவரிகளும் பதிவு செய்யப்பட்டன.

தேசிய அடையாள அட்டைகளில் உள்ள முகவரிகளும் கொழும்பில் தங்கியுள்ள முகவரிகளும் பதிவு செய்யப்பட்டதுடன் ஏற்கனவே பொலிஸார் வைத்திருந்த புத்தகம் ஒன்றில் பதிவு செய்திருந்த அடையாள அட்டைகளின் இலக்கங்களும் முகவரிகளும் ஒப்பிட்டு பரிசோதிக்கப்பட்டன என்று கூறப்பட்டது.

அத்துடன், கைத்தொலைபேசி இலக்கங்களும் பதிவு செய்யப்பட்டன. காவல் துறையினர் ஏற்கனவே வைத்திருந்த வேறு தொலைபேசி இலக்கங்களைக் காண்பித்து இந்த இலக்கங்கள் தொடர்பாக எதுவும் தெரியுமா - எனவும் கேட்டனர்.

குறித்த பிரதேசங்களில் வீதியால் நடந்து சென்றவர்களும் வாகனங்களில் சென்றவர்களும் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டனர். ஆனால் எவரும் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படவில்லை என்றும், இந்த சோதனை நடவடிக்கையின்போதுபெரும் எண்ணிக்கையான படையினர் காவல் கடைமை யிலிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## இன்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளது.

ஐ.தே.கட்சி எம்.பியான ரவி கருணாநாயக்கவே மேற்படி விடயத்தை நேற்று 'உதயனு'க்கு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

2009ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பின் போது பல புதுமையான விடயங்கள் இடம்பெறும். அவை இந்த நாட்டு மக்களுக்கு சாதகமாகவே அமையும்.

இலங்கை வரலாற்றில் என்றுமே சம்பந்தப்படாத ஒரு மிக மோசமான வரவு-செலவுத் திட்டம் என்றால் அது இந்த வரவு-செலவுத் திட்டம் தான்.

அனைத்துக்கும் வரிகளை அதிகரித்து மக்கள் மீது பாரிய சுமையை ஏற்றியுள்ள இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிப்பதன் மூலம் இந்த நாட்டுக்கு எந்த நன்மையும் கிட்டப்போவதில்லை.

நாட்டு மக்களை மிகவும் துன்பத்திற்குள்ளாக்கப்போகும் இந்த வரவு-செலவுத் திட்டத்தை நாம் எதிர்த்தே ஆக வேண்டும். அதுதான் இந்த நாட்டுக்கு நாம் செய்யும் மிகப் பெரிய சேவையாகும். ஆகவேதான் இதற்கு எதிராக வாக்களிக்க எம்முடன் கைகோர்க்குமாறு நாம் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

அதேபோல், அரசில் இணைந்துள்ள எமது கட்சியைச் சேர்ந்த 17 பேர்களுள் அதிகமானோர் வாக்கெடுப்பு நேரத்தில் எம் பக்கம் வரக்கூடிய வாய்ப்புகள் நிறையவுள்ளன - என்றார். (அ-சி)

## தமிழக மக்களும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று நான் திடமாக நம்புகிறேன்.

இராணுவ நடவடிக்கைகளின் போது மக்களை முழுமையாகப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொண்டுள்ளது.

ஆனால், தமிழ் நாட்டின் ஊழல் நிறைந்த அரசியல்வாதிகள் இலங்கைப் பாதுகாப்புக் படையினருக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறார்கள்.

புலிகளிடம் இருக்கும் சிறிய விமானங்களால் இந்தியாவுக்கு ஆபத்தில்லை. இந்தச் சிறிய விமானங்களால் இந்தியாவில் அதிகம் எதையும்செய்ய முடியும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், கடற்புலிகளால் இந்தியாவுக்கு அதிக பிரச்சினைகள் ஏற்படமுடியும். அவர்கள் கடந்த காலங்களில் அநேக இந்திய மீனவர்களைக் கொன்று ஆயுதங்கள் மற்றும் மருந்துகளைக் கடத்தியுள்ளனர்.

எல்லாவற்றையும் வைத்துப்பார்க்கும் போது புலிகளின், தனியரசுக்கொள்கையானது இந்தியாவுக்கு அச்சுறுத்தலாகும். ஏனெனில் இந்தக்கொள்கை தமிழ் நாட்டிலும் கூடப் பரவிவிடும். தமிழ்நாட்டில் புலிகளுக்கு ஆதரவானவர்கள் உள்ளனர். அதாவது இந்தப் போக்கு தமிழ் நாட்டுக்கும் ஆபத்தாக முடியும் - என்று இராணுவத் தளபதி தமது பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை -

இந்திய ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த இராணுவத் தளபதி -

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டால் அதன் அனுதாபிகளான பழ.நெடுமாறன் மற்றும் வைக்கோ போன்றோர் அவர்களுக்குக் கிடைக்கும் வருமானத்தை இழந்துவிடுவார்கள். ஏனெனில் அவர்களுக்கு விடுதலைப் புலிகளிடம் இருந்து வருமானம் கிடைக்கிறது.

விடுதலைப்புலிகளை காப்பாற்றுவதற்கு அவர்கள் எடுக்கும் முயற்சிகள் பலன் அழிக்காது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். விடுதலைப் புலிகள் அழிவின் விழிம்பில் நிற்கிறார்கள் என்ற உண்மையையும் அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரச்சினை இலங்கை உள்நாட்டுப் பிரச்சினை. ஆகையால் தமிழகத் தலைவர்கள் இலங்கையின் இறைமையை மதிக் கப்பழகிக் கொள்ள வேண்டும் - என்று கூறியதாக இணையத்தளம் ஒன்று தெரி வித்திருக்கிறது. (அ-02)

# வெள்ளத்தால் பாதிப்புற்றவர்களுக்கு ஒரு வாரத்துக்குரிய உலர் உணவு

யாழ்ப்பாணம், டிசெ.08

குடாநாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு வார காலத்துக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இது சம்பந்தமான அறிவித்தலை யாழ் மாவட்டத்தின் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அனுப்பி உள்ளார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் ஓர் அங்கத்தவராயின் 245ரூபாவுக்கும், இரண்டு அங்கத்தவர் கொண்ட குடும்பங்களுக்கு 315ரூபாவுக்கும் மூன்று அங்கத்தவர் கொண்ட குடும்பங்களுக்கு 385ரூபாவுக்கும் நான்கு அங்கத்தவர் கொண்ட குடும்பங்களுக்கு 455 ரூபாவுக்கும் ஐந்துக்கும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர் குடும் பங்களுக்கு 525 ரூபா வுக்கும் பெறுமதியான பொருள்கள் வழங்கப் படவுள்ளன.

இது சம்பந்தமான விவரங்களை திரட் டும் நடவடிக்கையில் கிராம அலுவலர்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க தாகும்.

# வன்னியில் மீண்டும் மழை!

கொழும்பு, டிசெ.8

கடந்த சில தினங்கள் தணிந்திருந்த மழை நேற்றுமுன்தினத்திலிருந்து மீண்டும் கடுமையாகப் பெய்யத் தொடங்கியிருப்பதால் வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் குடியிருப்புக்கள் பலவற்றினுள் மீண்டும் வெள்ளம் உட்புகுந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் தற்காலிக குடிசைகள் பவற்றினுள் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் அதற்குள் குடியிருக்க முடியாத நிலையும் தோன்றியுள்ளது.

கடந்த வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டு பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தங்கியிருந்துவிட்டு மீண்டும் குடியிருப்புக்களுக்குச் சென்றவர்கள் தற்போது பெய்து வரும் மழை காரணமாக மிகுந்த பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர். வங்காள விரிகுடாவில் ஏற்பட்டிருக்கும் தாழமுக்கம் காரணமாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்தும் கடும் காற்றுடன் மழைபெய்யும் என வானிலை அவதானிப்பு நிலையம் அறிவித்துள்ளது. (அ-சி)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடும் மோதலில் 14புலிகள் கொல் லப்பட்டார்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

களமுனைத் தகவல்களின் படி செயலணிப்படை I மற்றும் 57ஆவது பிரிவுப் படையினர் கிளிநொச்சிக்கு முத்தமிடும் தூரத்தில் நிலைகளை எடுத்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் மற்றும் விமானப்படையினர் அடம்பன், வட கிளிநொச்சிப் பகுதிகளில் நேற்றுப் பிற்பகலில் நடத்திய தாக்குதலில் புலிகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சியை அண்மித்த பகுதியில் படையினருடன் ஏற்பட்ட மோதலிலும் புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ள தாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-02)

## வைத்திய சிகிச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் பி.பி.சி. தமிழோசைக்கு நேற்றிரவு கூறியவை வருமாறு:-

''நான் ஏற்கனவே இந்தியாவில் வைத்திய சிகிச்சை ஒன்றிற்காக பதிவை மேற்கொண்டிருந்தேன். அந்த சிகிச்சை நாளை மறுதினம் (அதாவது செவ்வாய்க்கிழமை) இடம்பெறவுள்ளது.

''அந்த சிகிச்சைக்காக இந்தியாவிற்குச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தைச் சென்றடைந்தபோதே நான் திருப்பியனுப்பப்பட்டேன்.

''விமான நிலையத்தில் அனுமதி மறுத்த அதிகாரிகள் என்னை குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் அழைத்துச் சென்றனர். அங்கிருந்த குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரி இது மேலிடத்து உத்தரவு என எனக்குத் தெரிவித்தார்.

"இந்தவிடயத்தை எமது கூட்டமைப்புத் தலைவர் ஊடாக நாளை (அதாவது இன்று) சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டு வரவுள்ளேன்'' - என்றார்.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக ஏற்கனவே மழை மற்றும் புயல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் இடம்பெயர்ந்து அயலில் உள்ள ஆலயங்கள், பாடசாலைகளில் தஞ்சம் அடைந்துள்ளார்கள்.

இதேவேளை-

வங்கக் கடலில் ஏற்பட்ட தாழமுக்கத்தினால் வடக்கு-கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இன்னும் சில தினங்கள் சீரற்ற கால நிலை தொடரும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அநுராதபுரம் மற்றும் பொலன்நறுவை ஆகிய மாவட்டங்களில் சுழல் காற்று மற்றும் இடியுடன் கூடிய கன மழை பெய்யும் என்றும் வானிலை அவதான நிலையம் மேலும் அறிவித்துள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பகுதிகளில் கடல் கொந்தளிப்பு காணப்படும் என்றும் அதனால் மீனவர்களை கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இச்சீரற்ற காலநிலை மேலும் இரண்டு நாள்களுக்கு நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. வங்கக்கடலில், 350 கடல்மைல் தொலைவிலேயே தாழமுக்கம் ஏற்பட்டிருக்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-2-86)


THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA

| CHEMISTRY | COM. MATHS |
|---|---|
| 2009 A/L | 2010 A/L |
| அயன் சமநிலை | நேர்கோடு |
| ஆரம்பம்: 10.12.2008 | ஆரம்பம்: 09.12.2008 |
| MON,WED,FRI 6.30-7.30 A.M | TUE,FRI 6.30-7.45 A.M |
| BY:- RAJAH | BY:- AINHARAN |

வர்த்தகப் பிரிவு
விடுமுறைக்கால வகுப்புகள்
DMI
A/L - 2009, 2010
திங்கள், புதன், வெள்ளி

| நேரம் | ஆசிரியர்கள் | |
|---|---|---|
| | நாவலர் வீதி | ஸ்ரான்லி வீதி |
| 8.00 - 9.30 | S.S.சிறி | B.S.பசில் |
| 9.30 - 11.00 | B.S.பசில் | D.Sam |
| 11.00 - 12.30 | D.Sam | S.S.சிறி |

CHEMISTRY
A/L DAY CLASS
அசேதன இரசாயனவியல்
ஆரம்பம்:- 08.12.2008 (இன்று)
Mon - 4.30 P.M
(Mon, Fri 4.30 - 5.30 P.M)
S.VASU B.Sc
NAVALAR
JAFFNA.
(சி/555947)


கணினித்துறையில் அனைவரும் பயனடையும் விதமாக...
விசேட சிறப்பு சலுகை
100% செய்முறைப்பயிற்சி
கணினி & LapTops களினை நீங்களே அமைத்துக் கொள்ள...
தமிழ் மொழி விளக்கங்களிலான முற்றிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய
DIPLOMA IN HARDWARE ENGINEERING
Fee 1,500/= only ஆரம்பம்: 10/12/2008, 14/12/2008, 17/12/2008, 10.00 a.m. & 3.00pm
Duration : 2 Months
Microprocessor, Various Mother Board Handing, All Type of Cards, HDD, FDD, CD ROM Drive, Printers, Installation of O/S & Software, Assembling upgrading, Configuring, Troubleshooting, Repairing, User Level Networking
DMI COMPUTER EDUCATION
NO. 113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ICT புதிய வகுப்புகள் ஆரம்பம் R.KUMARAN
Tamil/ English Medium Classes
Grade 10 - Fundamentals
Grade 11 - Visual Basic(VB6)
BY: R.KUMARAN (B.Sc.)
தொ.பே.: 060 221 6083

கலைப் பிரிவு
விடுமுறைக்கால வகுப்புகள்
சனி, ஞாயிறு நேர அட்டவணைப் படி
திங்கள், புதன், வெள்ளி
தினங்களில் வகுப்புகள் நடைபெறும்.
DMI நாவலர் வீதி, யாழ்.

NAFISA SPOKEN ENGLISH
Nafisa Spoken English - VCD+ACD
Day by Day Spoken English. Tick - Soft - VCD/DVD/ CR- ROM
GO GO'S சிறுவர்களுக்கான Learning English- VCD
பின்வரும் புத்தக நிலையங்களில் பெறலாம்.
பூபாலசிங்கம் - யாழ்., அன்னை - யாழ்., ஆல் சிலோன் - யாழ்.

IBS கல்வி நிறுவனம் கண்டுக்குளி
10.12.08 புதன் 3.00 மணி புதிய வகுப்புகள் ஆரம்பம்
தரம் 1 முதல் O/L வரை

அன்போலி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
புதிய கல்வியாண்டு - 2009
ஆரம்பப்பிரிவு - தரம் 4, தரம் 5 புலமைப்பரிசில் வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.
தரம் 6 முதல் O/L வகுப்புக்கள் அனுபவமிக்க ஆசிரியர்களின் சங்கமத்தில் 10.12.2008 புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகின்றன.
பதிவுகளை முற்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
நிர்வாகி: J.S.செல்வபாஸ்கர்.

32 ஆவது வருட சேவை
கல்வியாண்டு 2009
கிளை 417, கே.கே.எஸ். வீதி (யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில்)
தரம் 6, 7, 8, 9, 10, O/L Evening Class
ஆரம்பம்- 10.12.2008 காலை 9மணி
* யாழ்.நகரில் அனுபவமும் அதி திறமையும் உள்ள ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.
* கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.
* இன்று முதல் கிளை நிறுவனத்தில்3 மணி தொடக்கம் 5 மணி வரை அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
விக்னா கல்வி நிறுவனம்
கிளை 417, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத் தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org